# மோதுகை மாற்றுநிலையாக்கத்தில் பண்பாடு, அதிகாரச் சமச்சீரின்மைகள் மற்றும் பால்நிலை

டயானா பிரான்சிஸ்




1. அறிமுகம் 108

2. பண்பாடு, பால்நிலை, மற்றும் அதிகாரம்: தொடர்புநிலை 109

மேலாண்மைப் பண்பாடு 109

மோதுகை மற்றும் அதன் நடத்தைமீதான ஆதிக்கப்பாங்குகளின் தாக்கம் 112

3. மோதுகை மாற்றநிலையாக்கத்துக்கான தாற்பரியங்கள். 114

பண்பாட்டு மாற்றுநிலையாக்கம் : நவகுடியேற்றவாத குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்தல். 114

அதிகாரச் சமச்சீரின்மைகளுக்கும், அநீதிகளுக்கும் தீர்வுகாணுதல் 116

சமத்துவத்தை ஆதரித்தல்தொடர்பான இக்கட்டு நிலைகள் 121

4. நல்ல நடைமுறை 125

நிறுவனங்களில் பண்பாட்டு கூருணர்வு, பால்நிலைசமத்துவம் மற்றும் மதிப்பளிக்கின்ற அதிகாரப்பிரயோகம் 125

இடையீட்டில் பண்பாட்டுக் கூருணர்வு, பால்நிலைச்சமத்துவம் மற்றும் மதிப்பளிக்கின்ற அதிகாரப்பிரயோகம் 126

5. தொடரும் கேள்விகளும், கண்ணோட்டங்களும் 127

6. உசாத்துணை, மேல் வாசிப்புக்கானவை 129

# மோதுகை மாற்றுநிலையாக்கத்தில் பண்பாடு, அதிகாரச் சமச்சீரின்மைகள் மற்றும் பால்நிலை

டயானா பிரான்சிஸ்

## 1. அறிமுகம்

ஒரே அத்தியாயத்தில் இம்மூன்று விடயங்களிலும் கவனஞ்செலுத்த முனைவதென்பது பெரியதொரு சவாலேயாகும். ஆனால், அவற்றுக்கிடையில் மிக நெருக்கமான தொடர்பிருப்பதனால் அவ்வாறு செய்தல் அர்த்தமுள்ளதுமாகும். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வழக்கில் மேலோங்கியிருந்த பரவுநிலை ஆதிக்கக் கலாசாரம் அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளதென்றும், அது அடக்கியாள்கின்ற ஆண் பெண் தொடர்புகளைப் பண்பாக கொண்டுள்ளதென்றும் நான் வாதிடவுள்ளேன். இப்பண்பாட்டையும், சமச்சீரற்ற பால்நிலை உருவாக்கங்களிலும், தொடர்புகளிலும் அதன் வெளிப்பாட்டையும் எதிர்க்க வேண்டியதன் தேவையை - கடந்த ஐந்நூறு ஆண்டுகால குடியேற்ற ஆட்சியினால் உருவாக்கப்பட்ட மற்றோர் உலகளாவிய அதிகாரச் சமச்சீரின்மையான மேற்குக்கும் எஞ்சிய உலகுக்கும் இடையிலான சமச்சீரின்மையில் கவனஞ்செலுத்தவேண்டியதன் தேவையை நான் எடுத்துக் காட்டவுள்ளேன். இவ்வரலாற்று மற்றும் அதன் விளைவான கட்டமைப்புத் தொடர்புகள், பண்பாடு தொடர்புடைய விடயங்கள் பற்றிய கண்ணியமானதும், நேர்மையானதுமான உரையாடலை மிகக் கடுமையானவையாக்கியுள்ளன. அது மோதுகை மாற்றுநிலையாக்கம்பற்றி மேற்குலகுக்கு வெளியே காணப்படும் சந்தேகத்தையும் விளக்குவதாயுள்ளது. அதிகாரம்பற்றிய வினாக்களுக்கும், உலகளாவிய தொடர்புகளில் நீதிக்கான தேவைக்கும், பெண்களுக்கும் ஏனைய ஓரங்கட்டப்பட்ட குழுக்களுக்குமான சமத்துவ உரிமைக்கும் முக்கியத்துவம் அளித்தாலன்றி அது உலகின் பெரும்பாலான மக்களால் காத்திரமானதாக எடுத்துக்கொள்ளப்படவோ, அவர்களின் அனுபவங்களாலும் நுண்ணறிவுத்திறன்களாலும் வளமூட்டப்படவோமாட்டாது. அது ஆதிக்கம் பற்றிய வினாவில் கவனஞ்செலுத்தத் தவறிவிடுமெனப்படுதன், உண்மையில் சமாதானமான (அதாவது நீதியான) தொடர்புகளைச் சாதிப்பதற்குப்பதிலாக, அமைதிப்படுத்துகின்ற ஒரு கைக்கருவியாகச் செயற்பட்டு, ஆதிக்கத்தை நீடித்திருக்கச்செய்வதற்குத்தான் உதவும் என்று வாதிடலாம்.

இதன் முதலாவது பகுதியில் நான் பண்பாடு, அதிகாரம் பற்றிய மனப்பாங்குகள் மற்றும் அதிகாரச் சமச்சீரின்மை என்பவற்றுக்கிடையிலான தொடர்பையும், பால்நிலை உருவாக்கங்களையும், பால்நிலைத் தொடர்புகளையும், மோதுகைமீதும், அதன் நடத்தையின்மீதும் இம்மூன்றினதும் தாக்கத்தையும் (அவற்றின் பரஸ்பர செல்வாக்கையும்) ஆராயவுள்ளேன். இரண்டாவது பகுதியில் மோதுகை மாற்றுநிலையாக்கத்தில் அதன் தாற்பரியங்களையும், அது உள்ளடக்கியுள்ள பெறுமானங்களுக்கும், இலட்சியங்களுக்கும் இடையிலான சில உலைவுகளையும், அது மாற்றுநிலையாக்க முனைகின்ற நிலைமைகளின் யதார்த்தங்களையும் பரிசீலனை செய்யவுள்ளேன்.

இவ்வத்தியாயத்தின் மூன்றாவது பகுதியில் சமத்துவம், பண்பாட்டு கூருணர்வு, அதிகாரம் பற்றிய ஆக்கபூர்வமான அணுகுமுறைகள் என்பவற்றுக்கான தேவைகளை எவ்வாறு மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்குப் பங்களிக்கவிளைகின்ற நிறுவனங்களுடன் ஒருங்கிணைக்கலாமென்று ஆராய்வதுடன், மோதுகை இடையீட்டில் உள்ள நல்ல நடைமுறைக்கான சில அம்சங்களையும் முன்வைக்கவுள்ளேன். நாம் எதிர்நோக்குகின்ற சவால்களின் அளப்பரிய தன்மையைச் சிந்தித்துப்பார்த்து, எமது செயலூக்கத்திலும் பகுப்பாய்விலும் கூடிய நெகிழ்வானதும், தேர்வு முறைப்படியானதுமான அணுகுமுறையொன்று தேவையென்று ஆலோசனைகூறி இதனை நிறைவுசெய்யவுள்ளேன்.

# 2. பண்பாடு, பால்நிலை, மற்றும் அதிகாரம்: தொடர்புநிலை

## 2.1 மேலாண்மைப் பண்பாடு

பண்பாடுகள் நிலையானவையோ, ஒரே சீரானவையோ அல்ல. மாறாக, அவை நெகிழ்வானவையும், சிக்கலானவையும், மாறுகின்றவையுமாகும். கலாசாரத்தை வரையறைசெய்வதென்பது உண்மையில் கடினமானது. எனது மிகப்பெரிய அகராதி (இங்கு எமக்குத் தேவைப்படும் அர்த்தத்தில்) கூறக்கூடியது அது "(ஒரு) குறிப்பிட்ட வகையிலான ஆய்வறிவுசார் அபிவிருத்தி" என்பதாகும். கலாசாரம் என்று நான் கருதுவது வாழ்க்கைபற்றிய ஊகங்களின் பாங்கமைப்பும், அதன் யதார்த்தங்களும், தேவைப்பாடுகளும், அதன் உள்ளார்ந்த அல்லது அதனுடன் இணைந்ததான பெறுமானங்களும், நியமங்களுமே. கலாசாரம் என்ற கருத்து தன்னளவிலே ஒரு கலாசார உருவாக்கம் என்றும், ஒப்பீட்டளவில் அது அண்மைக்காலம் சார்ந்த ஒன்றென்றும் ஒருவர் வாதிடலாம். அது ஏறக்குறைய அர்த்தமற்றதாகக் கூடியவாறு தெளிவற்றதும், பிரச்சினைக்குரியதுமான ஓர் எண்ணகருவென்று வாதிடப்படலாம். எனினும், அதன் இடர்ப்பாடுகள் அதன் முக்கியத்துவத்தை இல்லையென்று மறுக்கவில்லை. மனித சிந்தனை, செயற்பாடுகள் மற்றும் உறவுகளின் அடிப்படைகள்பற்றிப் பேசுவதற்கான ஒரு வழிமுறையை அது வழங்குவதனாலும், அதேயளவு சிரமமானதும், முக்கியமானதுமான அடையாளமென்ற எண்ணக்கருவுடன் மிக நெருக்கமான ஒரு தொடர்பை அது கொண்டிருப்பதனாலும் அதனைப் புறக்கணிப்பதற்கோ, எண்ணத்திலிருந்து அகற்றிவிடுவதற்கோ முடியாத அளவுக்கு மிக முக்கியமானதாயுள்ளது.

பண்பாடென்ற உண்மையான கருத்தின்படி அது சமுதாயங்களுக்கு மட்டுமன்றி, அவற்றினுள் உள்ள தனிப்பட்டவர்களுக்கும் வேறுபடக்கூடியதும், குறிப்பானதாக இருக்கவேண்டிய தென்பதும் இன்றியமையாததாயுள்ள அதேவேளையில், அண்மிய சகத்திரங்களில் பொதுவிதிக்குட்பட்டதும், பெரும்போக்கிலான ஏறக்குறைய எல்லாக் பண்பாடுகளிலும் இழையோடி இருப்பதுமான ஆதிக்கத்தை அடிப்படையாகக்கொண்ட மைய பெறுமானம் ஓர் இனம் ஏனையவற்றின்மீதும், ஒரு குழு ஏனையவற்றின்மீதும், ஒரு நபர் ஏனையோர்மீதும், ஒரு பால் மற்றதன்மீதும் ஆதிக்கஞ்செலுத்துவது என்று றியான் ஐஸ்லர் (1990) நம்பத்தக்கமுறையில் வாதாடுகின்றார். இதனை அவர் ஓர் ஷஷஆதிக்கஞ் செலுத்தும் பண்பாடு" என்று விவரிக்கின்றார். மோதுகையான ஊகங்கள் இருந்தபோதிலும், குறைந்தபட்சம் சில சமுதாயங்களிலாதல் கடந்தகாலத்தில் சமத்துவக் கொள்கையும், ஒத்துழைப்புத்தொடர்புகளும் நியமங்களாக இருந்துள்ளதுடன், மீண்டும் அவ்வாறே இருக்கலாமென்றும் ஐஸ்லர் கருதுகின்றார். இது இவ்வாறிருக்க ஆதிக்கப் பண்பாடு கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் பற்றிய எமது பார்வையை மறைப்பதுடன், அக்கண்ணோட்டம் சோர்வூட்டுகின்ற வகையில் எதிர்காலத்தையும் எட்டுகின்றது.

ஆதிக்கம் அதிகாரச் சமச்சீரின்மையை அதன் இலக்காகக்கொண்டிருப்பதுடன், அதில் தங்கியுமுள்ளது. அது பெரும்பாலான மக்கள் பெரும்பாலான பண்பாடுகளில் அதிகாரம் என்ற சொல்லுடன் உடனடியாக இணைத்துப்பார்க்கின்ற வகையிலான தொடர்பைக் குறிக்கின்றது. அதாவது, எதையேனும் செய்யும் ஆற்றலுக்கு அல்லது ஏனையோர் சார்பில் செயற்படுகின்ற பொறுப்புக்கு மாறாக, ஆட்கள் மீதும், பொருள்கள் மீதுமான அதிகாரம் என்ற கருத்தைக் (போல்டிங் 1978) குறிக்கின்றது. ஏனையோர்மீது அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு வெவ்வேறான அநேக சாதனங்கள் உள்ளன: செல்வம், வளங்களின் கட்டுப்பாடும், வர்த்தக நியதிகளும், மொழி, கல்வி, நாகரீகப் பாணி, அரசியற்கட்டமைப்புகளும், நடைமுறைகளும், சட்டங்கள் (அவற்றின் ஆக்கமும், பிரயோகமும்), இராணுவ முறைமைகளும், யுத்தங்களும் அடங்கலாக எந்த அளவிலுமான சிறைப்படுத்தலும், உடல்ரீதியான வன்முறையும் அல்லது அதற்கான அச்சுறுத்தலும். தீங்கானதும், அழிவை ஏற்படுத்துகின்றதுமான பிறர்மீதான அதிகாரப்பிரயோகமான வன்முறையானது ஆதிக்கத்துக்கான வழிமுறையும் அதன் விளைவுமாயுள்ளது. ஓர் ஆதிக்கக்

109

பண்பாடென்பது ஒரு வன்முறைக் பண்பாடாகும். ஜொஹான் கல்துங் கூறியவாறு "பண்பாட்டு வன்முறையானது நேரடியான, கட்டமைப்புச்சார்ந்த வன்முறையை நியாயமானதெனத் தோன்றுவதற்கு அல்லது எண்ணுவதற்குக்கூட அல்லது குறைந்த பட்சம் பிழையற்றதாகச் செய்கின்றது'' (கல்துங் 1990,ப,291).

பெண்களுக்கெதிரான அடக்குமுறை, பண்பாட்டின்படி பெரும்பாலும் விளக்கப்படுவதுடன், உண்மையில் நியாயப்படுத்தவும் படுகின்றது. பால்நிலையை ஆண்மையினதும், பெண்மையினதும் உருவமைப்பாக வெளிப்படுத்தப்படும் பால் வேறுபாட்டின் சமூக நிர்மாணமாக வரைவிலக்கணம் செய்யலாம் (பிரான்சீஸ் 2000). மரபுரீதியாக உருவமைக்கப்பட்டவாறு, பால்நிலை வேறுபாடுகள், அதிகாரச் சமச்சீரின்மையை மையமாகக்கொண்டனவாக, ஆதிக்கக் பண்பாட்டுக்கு இன்றியமையாதவையாகும். ஆண்மை வல்லமை மிக்கதாக, வலுச்சண்டையிடுவதாக, கட்டுப்படுத்துவதாக உருவமைக்கப்படுகின்றது. பெண்மை தாழ்ந்ததாக, வலிமையற்றதாக, கீழ்ப்படிவுள்ளதாக, சேவையாற்றுவதாக அல்லது (கூடிய ஆக்கமுறையில்) பேணி வளர்ப்பதாக உருவமைக்கப்படுகின்றது. இவ்வுருவமைப்பின் கடைக்கோடியான வேறுபட்ட விளக்கத்தின்படி பெண்கள் ஆண்களின் உடைமைகளாக நடத்தப்படவேண்டிய ஒரு துணை இனமாகக் கருதப்படுகின்றனர். பெண்கள்தான் பெரும்பாலான நேரத்தைப் பிள்ளைகளுடன் செலவிடுபவர்களாகவும், அவர்களின் பிரதம கல்விபுகட்டுபவர்களாகவும் இருப்பதனால் இப் பண்பாட்டுக் கருத்துக்கோணத்தை நீடித்திருக்கச்செய்வதில் அவர்கள் பங்குபற்றுகின்றார்களென்பது தெளிவு. பெண்கள்மீதான ஆண்களின் ஆகிக்கம் தான் மனிதசமுதாயத்திலும், சமூகங்களிலும் மிக அடிப்படையானதும், பரந்து காணப்படுகின்றதுமான அதிகாரச் சமசீரின்மை வடிவமாகும். உலகில் சிலபகுதிகளில் ஆண்களால் பெண்கள் அடக்கப்படுதல் குறைந்து வருகின்றது. ஏனையவற்றில் அதுகுறைவின்றித் தொடர்கின்றது. எனினும், (எல்லாவற்றிலும் இல்லாவிடினும்) பெரும்பாலான சமுதாயங்களில் பெண்களுக்கெதிரான இல்லத்து வன்முறை வழக்கமானதாயுள்ளதுடன், அநேகமானவற்றில் அது வெளிப்படையாக இல்லாதுவிடினும், மௌனமாக அங்கீகரிக்கப்படுகின்றது. சிலநாடுகளில் பெண்களின் நடமாட்டமும், நடவடிக்கைகளும் கட்டுப்படுத்தப்படுவதுடன், சட்டத்தின்கீழ் அவர்கள் கடுமையாகவும், பாரபட்சமாகவும் நடத்தப்படுகின்றனர்.பெண்கள் பொருளாதாரரீதியாகவும் அடக்கப்படுகின்றனர். ஒட்டுமொத்தத்தில் அவர்கள் செய்கின்ற வேலை ஆண்களால் செய்யப்படுவதைவிட மிகக்கூடுதலாக விஞ்சியபோதிலும், அவர்கள் சராசரியாக ஆண்களைவிட மிகக்குறைவாகச் ஷஷசம்பாதிக்கின்றனர''. உலக செல்வத்தின் மிகச்சிறியதோர் பங்கையே கட்டுப்படுத்துகின்றனர். மேலும், அவர்கள் பெரும்பாலும் மரபுரிமைச்சொத்தை அனுபவிப்பதிலிருந்து விலக்கித்தடுக்கப்படுகின்றனர். எனவே, உலகளாவிய நியதிகளின்படி ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையில் ஒரு தெளிவான அதிகாரச் சமச்சீரின்மை நிலவுகிறது.



கடந்த சில நூற்றாண்டுகளின் குடியேற்றவாத நடவடிக்கைகள் மற்றுமோர் உலகளாவிய அதிகாரச் சாய்வைக் கொண்டுவந்துள்ளன. ஏனையவற்றின்மீது ஒரு சில தேசங்களின் ஆதிக்கம் (இதனையே அலெக்சாந்தர், 1996, "உலகளாவிய இன ஒதுக்கீடு" என அழைக்கின்றார்) பரந்தவகையில் கூறுவதாயின் இதனை ஒரு புறத்தில் வடக்கும் மேற்கும் என்ற ரீதியாகவும், மறுபுறத்தில் தெற்கும் கிழக்கும் என்ற ரீதியாகவும் காணக்கூடியபோதிலும், உண்மையான காட்சி இதைவிடக் கூடிய சிக்கலானது. ஆதிக்கமானது வெவ்வேறு வடிவங்களை எடுக்கின்றது. இவை இராணுவ, பொருளாதார மற்றும் கலாசார வடிவங்களாகும். அதன் இராணுவ மற்றும் பொருளாதார அதிகாரத்துடன் இணைந்து அதன் ஆதிக்கத்துடன் தொடர்புடையவற்றுக்கும், அதனால் பாதிக்கப்படுவனவற்றுக்கும் இடையிலான ஊடாட்டச் செயற்பாடுகளின் மீது செல்வாக்குச் செலுத்துகின்றது. அது ஒருபுறத்தில் ஆதரவுப் பசப்பான மற்றும் ஒதுக்கிவிடுகின்ற மனப்பாங்குகளையும், அவற்றுக்கு அடிப்படையாக அமைந்த அச்சத்தையும், வெறுப்பையும் (பார்க்க செயிட் 1978) மறுபுறத்தில் சந்தேகத்தையும், மனக்கசப்பையும் தோற்றுவிக்கின்றது. குறிப்பாகக் பண்பாடு தொடர்பான வேறுபாடுகளை வெளிப்படுத்துதல் தேவையற்றதாகவும், குழப்பம்

ஏற்படுத்துவதாகவும் அல்லது அவமதிப்புக் காட்டுகின்றதாகவும், தன்முனைப்பானதாகவும் காணப்படக்கூடுமென்பதே இதன் கருத்தாகும். பண்பாடும், அடையாளமும் மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பதனால் ஆதிக்கத்தொடர்புகளில் பண்பாட்டு வேறுபாடுகள் ஓர் அச்சுறுத்தலாகக் கருதப்படுகின்றன.

பண்பாடு போன்று அடையாளமும் சிக்கலானதென்பதனால், ஆதிக்க அனுபவங்களும் அவ்வாறே சிக்கலானவை. எடுத்துக்காட்டாக, மேற்குலகப் பெண்களும், உலகின் ஏனைய பகுதிகளிலுள்ள ஆண்களும் உலகரீதியாக ஆதிக்கஞ் செலுத்துபவர்கள் மற்றும் ஆதிக்கத்துக்குட்பட்டவர்கள் என்ற இரு வகுதிகளையும் சேர்ந்தவர்களாயுள்ளனர். மேலும், எந்தவொரு நாட்டினுள்ளும் ஏற்றத்தாழ்வான தொடர்புகளைக்கொண்ட சமூகம் அல்லது இனத்துவக் குழு இருக்கும் வல்லமைமிக்க செல்வந்த நாடுகள் எல்லாவற்றிலும் "நான்காவது உலகு" என்றழைக்கப்படுகின்ற வறிய, ஓரங்கட்டப்படட மக்கள் உள்ளனர். சிலசமயங்களில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினுள் எண்ணிக்கையில் சிறுபான்மையாயுள்ள அடையாளக்குழுக்கள் ஒட்டுமொத்தத்தில் அரசியல்ரீதியாக அல்லது பொருளாதாரரீதியாகப் பெரும்பான்மையைவிடக் கூடிய வல்லமைமிக்கனவாக உள்ளன. சிலசந்தர்ப்பங்ளில் பாதிக்கப்பட்ட குழுக்கள் தார்மீக அழுத்தங்களை ஏற்படுத்துவதற்கும் மற்றும் ஆதரவைக்கட்டியெழுப்புவதற்குமான ஓர் அதிகார மூலமாக அவற்றின் பாதிப்பைப் பயன்படுத்துகின்றன.

எல்லாக் குழுக்களினுள்ளும், வாழ்வின் எந்தவொரு துறையிலும் தனிப்பட்டவர்கள் அதிகாரத்துக்காகப் போட்டியிடுகின்றனர். பெரும்பாலான தனிப்படடவர்கள் தமது வாழ்வின் சில விடயப்பரப்புகளில் சார்பளவில் அதிகாரம் மிக்கவர்களாகவும், ஏனையவற்றில் சார்பளவில் அதிகாரமற்றவர்களாகவும் உள்ளனர். மேலும், எல்லா மனித உயிர்களும் பல்வேறு சூழமைவுகளில் அதிகாரம் தொடர்பில் ஆதிக்க அணுகுமுறையையும், ஒத்துழைப்பு அணுகுமுறையையும் காட்டக்கூடியவர்களாயுள்ளனர். ஆண்கள் பிறப்பால் பெண்களைவிடக் கூடிய ஆக்கிரமிப்புத்தன்மை கொண்டவர்கள் என்றோ, கட்டுப்படுத்துபவர்கள் என்றோ, அல்லது மேற்கில் பிறந்தவர்கள் இயல்பாகவே ஏனைய இடங்களில் பிறந்தவர்களைவிடக் கூடுதலாக ஆக்கிரமிப்புத்தன்மை கொண்டவர்கள் என்றோ, கட்டுப்படுத்துபவர்கள் என்றோ நான் கூறவிரும்பவில்லை, வடக்கிலும், தெற்கிலும் அநேக அதிகாரம்மிக்க சுரண்டுகின்ற ஆண்களும், பெண்களும் உள்ளனர். ஓர் ஒட்டுமொத்த ஆதிக்கக் பண்பாட்டினுள், ஒத்துழைப்பான 'சக அதிகார' மாதிரிக்கும், 'பயன்கருதிய அதிகார' மாதிரிக்கும் எதிராக 'மீதான அதிகார' அல்லது ஆதிக்க பண்பாட்டு மாதிரிதான் விரும்பப்படுகின்றதென நான் வாதிடுகின்றேன். மரபுநிலை ஆதிக்கம் மிகுந்த அப் பண்பாட்டு சூழமைவினுள் பெண்களுக்கும், ஆண்களுக்குமென ஒதுக்கியளிக்கும் பால்நிலைப்பாத்திரங்கள் அவர்களுக்கிடையில் படுமோசமான அதிகாரச் சமச்சீரின்மையை விளைவிக்கின்றன. இது கட்டமைப்புரீதியாகவும், நடத்தையின் பிரகாரமும் வெளிப்படுத்தப்படுகின்றது. மேலும், குடியேற்றவாத நடவடிக்கைகளும், முறைவழிகளும் ஆதிக்க பண்பாட்டின் ஆதரவுடன், உலகின் வெவ்வேறு பகுதிகளுக்கிடையில் கட்டமைப்புச்சார்ந்த அதிகாரச் சமச்சீரின்மையை ஏற்படுத்தியுள்ளன. இது கட்டமைப்புரீதியான அநீதியையும், பண்பாட்டு ஏகாதிபத்தியத்தையும் தோற்றுவிப்பதுடன், எதைப்பற்றிய சொல்லாடலையும் - குறிப்பாகக் பண்பாட்டுக்கு சாட்டப்படக்கூடிய விடயங்கள்பற்றிய சொல்லாடலை - கூருணர்வுக்குரியதாகவும், சிரமமானதாகவும் ஆக்குகின்றது. தற்போதுள்ள புவியியல்சார்ந்த அரசியல் அதிகாரச் சமச்சீரின்மைகளின் சூழமைவில் பெண்களின் விடுதலை ஒரு மேற்கத்தியக் கருத்துருவாக்கமாக நோக்கப்படுவதனால், அது பண்பாட்டு ஏகாதிபத்தியத்துடன் தொடர்புபடுத்தப்படுவதற்கான வாய்ப்புண்டு.

ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலான மற்றும் மேற்குலகுக்கும் எஞ்சிய உலகுக்கும் இடையிலான பரந்த, ஒட்டுமொத்த அதிகாரச் சமச்சீரின்மைகள் இவ்வத்தியாயத்தின் பிரதான குவிவுமையமாக அமைகின்றபோதிலும், பண்பாட்டுக்கும், அடக்குமுறை அதிகாரக்கட்டமைப்புகளுக்கும்,

நடக்கைகளுக்கும் இடையிலான தொடர்பு எண்ணிறந்த துறைகளில் பொருந்தக்கூடியதொன்றாகும் (எடுத்துக் காட்டாக, தொழில் தருவோர் - ஊழியர் தொடர்புகளில், நிறுவனங்களினுள், அரசியல் முறைமைகளில் மற்றும் இனக்குழுக்களுக்கிடையில்).

## 2.2 மோதுகை மற்றும் அதன் நடத்தைமீதான மேலாண்மைப் பாங்குகளின் தாக்கம்

கருத்துக்கள், நடவடிக்கைகள், கட்டமைப்புகள் ஒன்று மற்றொன்று தொடர்பில் அல்லது மக்கள் ஒருவர் மற்றவர் தொடர்பில் மாறுகின்றபோது மோதுகையைக் காணக்கூடுமாயிருக்கும். மாற்றம் தவிர்க்க முடியாததாக மட்டுமன்றிப் பெரும்பாலும் விரும்பத்தக்கதாகவும் இருப்பதனால் மோதுகையையும் தவிர்க்கமுடியாது. பரந்தரீதியாகக் கூறுகின்றவிடத்து, அதனை ஒத்துழைப்பின்மூலம் அல்லது போட்டிகரமானமுறையில் கையாளக்கூடுமாயிருக்கும். நாம் முன்னர் கண்டவாறு ஆதிக்கப் பண்பாடொன்றில் வெவ்வேறு வகைகளில் வன்முறையுடன் தொடர்புடைய போட்டித்தகவு மாதிரிதான் தெரிவுசெய்யப்படுகின்றது. அத்தகைய ஒரு பண்பாட்டு சூழமைவில் மோதுகையுடன் தொடர்புடைய பகைமை பண்பாட்டு வேறுபாடுகளால் தூண்டப்படுகின்றது. மற்றவர்கள்மீது ஆதிக்க நோக்கங்கள் கற்பிக்கப்படுகின்றன. அத்துடன் "வேறுபட்டதன்மை" ஓர் அச்சுறுத்தலாக நோக்கப்படுகின்றது. வேறுபாடானது அதிகாரச் சமச்சீரின்மைகளுடன் தொடர்புடையதாயிருக்கின்றபோது, அதிகாரத்திலுள்ளவர்கள் கிளர்ச்சியை எதிர்பார்ப்பவர்களாகவும், கீழிருப்பவர்கள் அச்சுறுத்தப்பட்டவர்களாகவும், துஸ்பிரயோகம் செய்யப்பட்டவர்களாக எண்ணுபவர்களாகவும் இருப்பார்கள். அச்சமும், அவநம்பிக்கையும் மேலும் அதிகரிக்கும். எனவே, பண்பாட்டு வேறுபாடென்பது வளமூட்டுவதற்கான ஒரு மூலமாயிராமல், அந்நியப்படுத்துவற்கும், தப்பெண்ணத்திற்கும், தவறான பொருள் விளக்கத்துக்குமான ஒரு மூலமாயுள்ளது. அது ஒரு புறத்தில் ஒவ்வாமையுடன் அல்லது மதியாமையுடனும், மறுபுறத்தில் பலியான நிலை, மனக்கசப்பு மற்றும் அவமதிப்பு ஆகிய எண்ணங்களுடனும் தொடர்புடையதாயுள்ளது.



தற்போதுள்ள ஆட்புலத்தின் கட்டுப்பாட்டைப் பேணுவதற்காயினும்சரி, அல்லது ஆட்புலத்தை விஸ்தரிப்பதற்காயினுஞ்சரி (ஆட்புலமென்பது இங்கு நேரடியான மற்றும் உருவகமான கருத்தில்). ஆதிக்கஞ் செலுத்துவதற்கான அல்லது ஆதிக்கத்திலிருந்து தப்புவதற்கான விருப்பம் ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறைக்கு இடைவிடாத ஒரு தூண்டுதலாயுள்ளது. ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறையினாலும், அதற்கான அச்சறுத்தலினாலும் அநீதிதொடர்பில் மறைவாயுள்ள மோதுகை நீடித்திருக்கச் செய்யப்படுவதுடன், அதற்கான எதிர்ப்பும் அடக்கியொடுக்கப்படுகின்றது. ஒழுங்கமைக்கப்டட வன்முறைதான் அநீதியால் துன்பப்படுபவர்களுக்குப் பெரும்பாலும் இருக்கின்ற ஒரேயொரு பயனுறுதியுள்ள மாற்றுவழியாகக் காணப்படுகின்றது. குறைந்த அதிகாரமுடையவர்கள் கூடிய அதிகாரமுடையவர்களாக வேண்டிச்செயற்படும் போது அவர்கள் மோதுகையை ஏற்படுத்துபவர்களாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றனர். (பார்க்க கிங் 1963). மேலும், ஏறக்குறைய எல்லாச் சூழ்நிலைகளிலும் தமது அதிகாரமின்மையால் பயனடைந்தவர்கள் தமது இடத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கு வன்முறையை அல்லது கட்டுப்படுத்தும் வழிமுறைகளைப் பயன்படுத்துகின்றனர். பெண்கள் அடித்துத் துன்புறுத்தப்படுகின்றனர். அடிமைகள் தண்டிக்கப்படுகிறனர். புரட்சிவாதிகள் அரசாங்கப் படைகளினால் தாக்கப்படுகின்றனர், சிறிய நாடுகள் பெரிய நாடுகளின் மேம்பட்ட இராணுவங்களாலும், அணுவாயுதங்களினாலும் தாக்கப்டுகின்றன, அல்லது அச்சுறுத்தப்டுகின்றன. ஆதிக்க வன்முறைக் கலாசாரம் இவை எல்லாவற்றையும் "வழமையானவையாக" தோன்றச்செய்கின்றது.

யுத்தத்தில் முன்மாதிரியான ஆதிக்கப் பிரயோகமான - ஆணாதிக்கப் பால்நிலைப் பாத்திரம், குறிப்பாக முரட்டுத்தனமான, இரக்கமற்ற முறைகளில் நிறைவேற்றப்படுகின்றது. ஆதிக்கப் பண்பாட்டு வன்முறையான மோதலில் ஆண்கள் பங்குபற்றுகின்றபோது, குறிப்பாக அது கூட்டு

அடையாளத்துடன் தொடர்புடையதாக இருக்குமிடத்து, அவர்களுக்கு மகிமையையும், அங்கீகாரத்தையும், அந்தஸ்தையும் அளிக்கின்றது. உலகின் பட்டினங்களும், நகரங்களும் - வகை உதாரணமாக குதிரைகளில் அமர்ந்தவாறு வாளேந்திய ஆண்களாகிய - போராதிக்கச் சின்னங்களால் உருக்குலைக்கப்படுகின்றன. இப் பண்பாட்டுக் கருத்துக்கோணத்தில் பெண்கள் தாய்மாராகவும், போராளிகளின் ஆதரவாளர்களாகவும், அதேவேளையில் பலியாட்களாகவும், சமாதானத்தை ஏற்படுத்துவோராகவும் கருதப்படுகின்றனர். யுத்த நடத்தைப்பாங்கின் ஒரு பகுதிதான் ஆதிக்கத்தின் ஒரு பயங்கரச் சின்னமும், மனித உயிர்கள்மீதான கொடுங்கோன்மையுமான பெண்களும், ஆண்களும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுதல் ஆகும். பெண்கள் ஒரு குறிப்பிட்ட குழுவின் சொத்துகளாகக் காணப்படுவதனால், ஒட்டுமொத்தமாக அவர்களைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தலானது வழக்கத்துக்கு மாறானதல்ல என்பதுடன், அது ஆண்/பெண் ஆதிக்கத்தை மட்டுமன்றி, ஓர் ஆண்கள் குழுவின் மீது மற்றோர் ஆண்கள்குழுவின் வெற்றியையும் குறித்துக்காட்டுகின்றது.

யுத்தத்தில் பெண்கள் பலியாக்கப்படுவதும், துன்பப்படுவதும் பகை நடவடிக்கைகளில் அவர்கள் எவ்வித பங்கும் வகிக்கவில்லையென்ற கருத்தாகாது. உள்ளத்தைத் தொடுகின்றவகையில் பெண்கள் சமாதானத்தை ஏற்படுத்தும் சிறப்பான கதைகள் பல இருக்கின்றபோதிலும், யுத்ததிற்குத் தளம் அமைத்துக்கொடுக்கின்ற சமூகதுருவப்படுத்தலில் பெண்களும் ஈடுபட்டு தமது ஆண்களைப் போரிடுவதற்கு ஊக்குவிப்பதிலும், தூண்டுவதிலும் அவர்களின் பாத்திரம் பற்றியும், சிலசமயங்களில் அவர்கள் தாமே போரில் ஈடுபட்டமைபற்றியும் எடுத்துக்கூறுகின்ற வேறு கதைகளும் உள்ளன. அதேசமயம் சமாதான காலங்களில் பெண்கள் அனுபவிப்பதைவிடக் கூடிய குடும்ப, பொருளதாதார மற்றும் சமூக அதிகாரத்தை யுத்தம் அவர்களுக்குக் கொடுக்கமுடியும். அவர்களின் கணவன்மார் யுத்தம்புரியச் சென்றுவிட்டவேளையில் பெண்கள் பெரும்பாலும் குடும்பத்துக்குத் தேவையான வருவாயைத் தனியொருவராக ஈட்டுபவராகவும், குடும்பத்தலைவராகவும் ஆகின்றனர். குடும்பங்கள் இடம்பெயர நேரிடும்போது, பெரும்பாலும் பெண்கள்தான் உதாரணமாகப் பண்டங்களைத் தயாரித்து விற்பதன் மூலம் அவர்கள் உயிர்வாழ்வதற்குப் போதியதை உழைக்கின்றனர் (இவர்களின் புருஷர் இதனால் கோபங்கொண்டு தாம் ஓரம்கட்டப்பட்டவர்களாக எண்ணக்கூடியபோதிலும், பிள்ளைகளின் தேவைகள் மறுக்கமுடியாத ஓர் அழுத்தத்தைப் பிரயோகிக்கின்றன). கைத்தொழில்மயச் சமுதாயங்களில் பெண்களுக்கு முன்னர் அடைக்கப்பட்டிருந்த வேலைகளுக்கு அவர்கள் தெரிவுசெய்யப்படலாம். ஏனையவற்றில் அவர்கள் உள்நாட்டுச் சேவையில் நிர்ப்பந்தமாக ஈடுபடுத்தப்படலாம் (ரெயிமான் 1999). அதேசமயம் யுத்தம் புரிபவர்களுக்தெதிராக அறைகூவல்விடுப்பதிலும், யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகளிலும், பகை நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்தபவர்களை அல்லது வேறுவகையில் பாதிக்கப்பட்டவர்களைப் பராமரிப்பதிலும் பெண்களின் ஈடுபாட்டுக்கான எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன (ஆண்களும்கூட அவர்களின் பால்நிலை பற்றிய மாறாநிலைக்கருத்திலிருந்து விலகிச்செல்கின்ற ஒரு பாத்திரத்தை எடுப்பதற்கு விரும்பக்கூடும்; கட்டாய இராணுவச் சேர்ப்பைத் தவிர்த்தல் அல்லது. எதிர்த்தல்; சமாதான இயக்கத்தில் இணைந்துகொள்ளல் அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிபுரிதல்). எனினும் யுத்தங்கள் பெண்களின் உரிமைகளுக்காகவன்றி வேறு இலக்குகளுக்காகப் புரியப்படுவதனால், அவை முடிந்தவுடன் சமுதாயத்தில் பெண்களுக்கான இடத்தைப் பாரம்பரியமாக ஒதுக்கியுள்ளவர்கள் அதனை மீண்டும் செய்வதற்கே எதிர்ப்பார்ப்பர். பெண்கள் தாம் ஈட்டியதைத் தக்கவைத்துக்கொள்வது கடினமாயிருக்கும். அவர்களுக்கெதிரான பாலியல் தொடர்பான குற்றங்களுக்கு (குறிப்பாக வல்லுறவுக்கு) நிவாரணம் பெறுவதுகூட அவர்களுக்குச் சிரமமானது. யுத்தத்தின் பின்விளைவாகப் பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறை மட்டங்கள் அதிகரிப்பதுடன், பாலியல் வர்த்தகத்தின் ஊடாக அவர்கள் பண்டமாக்கப்படுவதும் பொதுவானதாகின்றது (அவ்வாறு பிரதானமாகப் பயன்படுத்துபவர்களில் சில சமயங்களில் ஐ.நா, ஓ.எஸ்.சீ.ஈ மற்றும் ஏனைய சர்வதேச நிறுவனங்களின் ஆண் பணியாளர் அடங்குவர்)

## 3. மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கான தாற்பரியங்கள்.

### 3.1 பண்பாட்டு மாற்றுநிலையாக்கம் : நவகுடியேற்றவாத குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்தல்.

மோதுகையை ஆக்கமுறையில் முகாமை செய்வதற்கான ஒரு திறவுகோல் அதில் சம்பந்தப்பட்டவர்களின் அடிப்படை மனிதத்தேவைகளைப் புரிந்துகொள்ளலும், அவற்றில் கவனஞ்செலுத்துதலும் என்று இத்துறையினுள் பரந்த அளவில் ஒப்புக்கொள்ளப்படுகின்றது (பேர்ட்டன் 1990). இவை அனுபவிக்கப்படுகின்ற முறையும், இவற்றை நிறைவேற்றக்கூடிய முறையும் பண்பாட்டு ரீதியாக மாற்றமுறுகின்றன. எடுத்துக்காட்டாக, அடையாளத் தேவைகளை நிறைவேற்றுவதில் சுயமதிப்பு வேறு முந்துரிமைகளை முன்னிலைப்படுத்துகின்ற பிற பண்பாடுகளுடன் ஒப்பிடுகையில் மேற்கத்தைய பண்பாடுகளில் பொருள்சார்ந்த காரணங்கள் கூடிய மத்திய பங்கு வகிக்கின்றனவென மாக்ஸ் - நீப் (1985) வாதாடுகின்றார் (மேலும் பார்க்க சாலெம் 1993). மோதுகை மாற்றுநிலையாக்கத்தின் குறுக்கு பண்பாட்டு அபிவிருத்திக்கு அத்தகைய வேறுபாடுகள் குறிப்பாகச் சுட்டுகின்ற சவால்கள் தாமே வெல்லமுடியாதவையல்ல. உண்மையில் அவற்றில் கவனஞ்செலுத்துவதானது மோதுகையின் தன்மை மற்றும் அதற்கான மனித பதில்நடவடிக்கைகளின் வீச்சுப்பற்றிய எமது ஒட்டுமொத்தப் புரிந்துணர்வைக் கூர்மையாக்கக்கூடிய வளமூட்டும் வாய்ப்பைக்கொண்டதொரு செயல்முறையாகும். பெண்கள் கூடுதலாகக் கருத்துவெளியிடத்தொடங்குவார்களாயின், அதுகூட மோதுகை மாற்று நிலையாக்க பண்பாட்டு வீச்சின் மீதும், நுண்ணறிவுகள்மீதும், ஒரு தாக்கத்தைக் கொண்டிருக்கும்.

மோதுகையைக் கையாள்கின்ற ஒரு முறையாக யுத்தமானது அதில் சிக்குண்ட பெண்களினதும், பிள்ளைகளினதும், சமூகரீதியாக ஓரங்கட்டப்பட்ட அல்லது அடக்கப்பட்ட வேறு குழுக்களினதும் தேவைகளில் கவனஞ்செலுத்துவதில்லையென்பது தெளிவு. அது பரந்த அளவில் பண்பாட்டு ரீதியாக அங்கீகரிக்கப்படுகின்றதென்பதும் தெளிவு. எனினும், குறிப்பிட்ட பண்பாடுகள் விழுமியங்களை உருவாக்குவதுடன் மட்டுமன்றி, அப்பெறுமானங்களாலும், அவற்றைக் கடைப்பிடிப்பவர்களாலும் உருவாக்கப்படுகின்றன. காலத்திலும், இடத்திலும் அவற்றின் வேறுபாடுகளும், வெளிப்பாடுகளும் எல்லையற்றவை என்பதுடன், அவற்றை உருவாக்க உதவியவர்களினால் அவை மாற்றவும் படுகின்றன. எந்தவொரு பண்பாட்டினுள்ளும் எல்லையற்ற வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவற்றில் சிலவற்றை எதிர்களென விவரிக்கலாம். இதற்குமேலாக வன்முறையான மோதுகையின் உடனடி வன்முறை அல்லாத முறைகளைப் பயன்படுத்துதல் என்ற கருத்துக்கள் "வன்முறையற்ற" என்பதற்கும் அக்கருத்துக்கும் அப்பால் சென்று வன்முறையை வெறும் உத்தியாக மட்டுமன்றிக் கோட்பாட்டு ரீதியாகவும் நிராகரிக்கின்ற ஒரு தத்துவத்தைச் சுட்டிக் காட்டுகின்றதும், அதற்கான ஆதரவளிக்கின்றதுமான "சாத்வீகம்" என்பதற்குமிடையில் ஒரு முக்கிய வேறுபாடுள்ளது. பின்னைய முறையில்தான் இவ்வத்தியாயத்தில் இப்பதம் பிரதானமாகப் பயன்படுத்தப்படுள்ளது.

வெளிப்பாடுகளிலும் அதன் கட்டமைப்பு மற்றும் மனப்பாங்கு சார்ந்த காரணங்களிலும் கவனஞ் செலுத்துவதற்கும், நீண்டகால மாற்றத்தைக் கொண்டுவருவதற்கும் முனைவதன்மூலம் மோதுகை மாற்றுநிலையாக்கத்தைக்கூட எதிர் பண்பாடு சார்ந்ததாகக் காணமுடியும். இச்சொற்றொடர் மாற்றத்துக்கான செயலையும், செயலால் அறிவிக்கின்றதும், அறிவிக்கப்படுகின்றதுமான ஒரு கோட்பாட்டுத் தொகுதியையும் மட்டும் குறிப்பிடவில்லை. அது குறிப்பிட்ட பெறுமானங்களின் அடிப்படையிலான குறித்த சில இலக்குகளையும் மறைமுகமாகக் குறிப்பிடுகின்றது. அது ஒரு தரப்பினால் மற்றொன்றின்மீதான ஆதிக்கமல்ல. மாறாக, அது ஆதிக்கமும், வன்முறையும் கொண்ட உறவுகளையும், கட்டமைப்புகளையும் வன்செயல் வெளிப்பாடுகளையும் மாற்றுநிலையாக்குவதாகும். இதற்குப்பதிலாக, மோதுகை மாற்றுநிலையாக்கம் மதிப்பும், ஒத்துழைப்பும், ஒப்புதலும் கொண்ட தொடர்புகளையும் மோதுகையைக் கையாள்வதற்கான ஆக்கபூர்வமான வழிமுறைகளையும், நியமங்களையும் இலக்காகக்கொண்டுள்ளது.

மேற்குலகுக்கு வெளியேயுள்ள அநேக மக்கள் - உலக மக்கள் தொகையில் மிகப் பெரும்பான்மையினர் மத்தியிலுள்ள கல்விமான்களும், அரசியல் வாதிகளும், சமூகரீதியாகத் தீவிரமாகச் செயற்படும் மக்களும் - மோதுகைத் 'தடுப்பு என்ற சொற்றொடருடன் பெரும்பாலும் தொடர்புடையதாக மோதுகைத் 'தீர்வு என அடிக்கடி குறிப்பிடப்படுவதும், பெருமளவுக்கு வட அமெரிக்காவிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும் தோன்றுவதாக அவர்கள் காண்கின்றதுமான ஒரு துறையைப்பற்றிச் சந்தேகிக்கின்றனர். அவர்களின் வாதங்களை இவ்வாறு சாராம்சப்படுத்தலாம்: "நிச்சயமாக அவர்கள் மோதுகைகளை நிறுத்த விரும்புகிறார்கள் - அவர்களுடையதையல்ல எம்முடைய மோதுகைகள் - மோதுகைகள் நிலவும் நிலையைக் குலைக்கின்றன. அது அவர்களுக்குப் பயனளிப்பதாயுள்ளது. அவர்கள் எதிர்ப்பை விரும்பவில்லை. அவர்களின் அதிகாரத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தலை அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் குண்டு பொழிந்தும், அச்சுறுத்தியும், என்ன செய்யவேண்டுமென்று மற்றவர்களுக்குச் சொல்லிக்கொண்டும் வீறுநடைபோடுகின்றனர். ஆனால் நாம் எமது இடத்தில் இருந்தாவறு சமாதானத்தைப் பேணவேண்டுமென விரும்புகின்றார்கள். நீதியில்லாமல் சமாதானமில்லை. எமது கௌரவமும், மதிப்பும் பணயம் வைக்கப்படும்போது நாம் போராடுவதற்குத் தயாராயிருக்கவேண்டும். சதாகாலமும் நெருக்கித் தள்ளமுடியாது. இதுதான் ஆகப்பிந்திய அவமதிப்பு. மிகப்பெரிய இராணுவமுனைப்பைக்கொண்ட அவர்கள் மோதுகையை நாம் எவ்வாறு கையாளவேண்டுமென்று எமக்குக் கூறுகின்றார்கள். எவ்வாறாயினும் எம்மைப் புரிந்துகொள்ளமுடியாத அறிவிலிகள் அவர்கள். அவர்களின் கோட்பாடு எமக்கு எவ்வகையிலும் பொருந்தாத பண்பாட்டு ஊகங்களை அடிப்படையாகக் கொண்டது. அவர்களிடம் பணம் இருப்பதனாலும், அவர்களே எல்லாவற்றையும் தீர்மானிப்பவர்களாக இருப்பதனாலும் சில சமயங்களில் அவர்கள் சொற்படி நடப்பவர்களாக நாம் பாசாங்குபண்ணவேண்டியிருக்கும். ஆனால், அவர்கள் தத்தமது வீடுகளில் இருந்துகொண்டு, தத்தமது வீடுகளை ஒழுங்குபடுத்திக்கொள்வது நல்லது. எவ்வாறாயினும், உலகின் பெரும்பாலான தீமைகள் அங்கிருந்துதான் வருகின்றன."



இது உண்மையில் வாதத்தின் ஒரு செப்பமற்ற எளிமையாக்கலேயாகும் (மேலும் ஒழுங்குபடுத்திய திட்பநுட்பமான கருத்து வெளிப்படுத்தல்களுக்குப், பார்க்க சாலெம் 1993). எனினும், இது அநேக சந்தர்ப்பங்களில் ஏதேனுமொருவகையில் கூறப்படுவதை நான் கேட்டுள்ள முறையான விடயமொன்றின் நியாயமான ஒரு பொதுக்கருத்தென நான் நம்புகின்றேன். மேற்குலகுக்கு வெளியே மோதுகை மாற்றுநிலையாக்கம் பயனுடையதாகவும், இயைபுள்ளதாகவும் காணப்படவேண்டுமாயின், அதன் இலக்கு மோதுகைத் தடுப்பு அல்லவென்றும், மாறாக நேரடியான பண்பாட்டு ரீதியான மற்றும் கட்டமைப்புச்சார்ந்த வன்முறையென்ற அதன் எல்லா வடிவங்களிலும் வன்முறையைத் தடுத்தல் அல்லது குறைத்தலென்று அது தெளிவுபடுத்தவேண்டும். படுமோசமான அநீதியை நீடித்திருக்கச்செய்வதென்ற செலவில் சமாதானம் வாங்கப்படும்போது தீர்வு ஏற்படமுடியாதென்ற செய்தியை மிக உறுதியாக அது தெரியப்படுத்தவேண்டும். அது எல்லோரினதும் தேவைகளும், அடையாளங்களும் புரிந்துகொள்ளப்படுவதும், மதிக்கப்படுவதுமான ஒரு செயல்முறையாகும். மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்குச் சார்பானவர்கள் மேற்குலகுக்கும், எஞ்சிய உலகுக்கும் இடையிலான நடப்புப் பெரும்போக்கு நடத்தை அதன் கோட்பாடுகளுக்கும், அபிலாசைகளுக்கும் இணங்கியதல்லவென்றும், அவர்கள் கூடிய நீதியான உலக ஒழுங்கொன்றைத் தேடுபவர்களுடன் கூட்டொருமைப்பாட்டைக் கொண்டுள்ளனரென்றும் ஏற்றுக் கொள்ளவேண்டியது அவசியமென்றும் நான் நம்புகின்றேன். இக்கருமங்களைச்செய்தால் மேற்குலகுக்கு அப்பாலுள்ள பண்பாடுகளில் மோதுகை மாற்றுநிலையாக்கம் மேலும் அபிவிருத்தியடைவதற்கான வாய்ப்பு அவகாசம் உருவாக்கப்படக் கூடும். அதன்மூலம் அது வெவ்வேறு வடிவங்களையும், வெளிப்பாடுகளையும் காணுமென்பதுடன் ஏனையோரின் அறிவினாலும், அனுபவத்தினாலும் செழுமையாக்கப்பட்டு ஓர் உண்மையான சர்வதேசப் பாரிமாற்றமாகவும் விளங்கும்.

மோதுகையில் ஆக்கபூர்வமான ஈடுபாட்டுக்கான தேவையை உலகளாவிய அநீதிகளும், அத்துடன் பால்நிலைப்பிரச்சினைகளும், சமுதாயத்தில் பெண்களுக்கான இடமும், அவர்கள் நடத்தப்படும் முறையும் அடங்கலாக அடக்குமுறை அதிகாரத் தொடர்புகளின் அனேக வேறு வடிவங்களும்

சுட்டிக்காட்டுகின்றன. நான் ஏற்கெனவே எடுத்துக்காட்டியவாறு, மனித உரிமைகளும், பெண்களுக்கு அவற்றின் பிரயோகமுமென்ற எண்ணப்போக்கு மேற்குலகில் தோன்றியதாகக் காணப்படுவதனால் சமுதாயத்தில் அவர்களின் இடம்பற்றி விசாரித்தல் அச்சமுதாயத்தின் பண்பாட்டை விசாரித்தல் என்ற கருத்தாகின்றது, ஆதலால், பெண்ணியத்தின் நிகழ்ச்சிநிரல்கள் ஏகாதிபத்தியஞ்சார்ந்தவையென இலகுவாக ஒதுக்கித்தள்ளப்படுகின்றன. பெண்களுக்கெதிரான பாரபட்சம் ஆதிக்கம் வாய்ந்த உள்நாட்டுப் பாரம்பரியங்களினால் நியாப்படுத்தப்படுகின்ற நாடுகளில் அநேக ஆண்களும், சில பெண்களும் அத்தகைய பாரபட்சத்தைக் பண்பாட்டின் பெயரால் காத்துநிற்பதுடன், அதனைக் கேள்விக்குட்படுத்துபவர்களைக் பண்பாட்டு அஞ்ஞானிகளென்றும், ஏகாதிபத்தியவாதிகளுடன் கூடிச் சதிசெய்பவர்களென்றும் குற்றஞ்சாட்டுகின்றனர். எனினும், பண்பாட்டு செல்வாக்குகளும், அதிகாரச்சமச்சீரின்மைகளும் மனப்பான்மைகளையும், நடத்தைப் பாங்குகளையும் விளங்கிக்கொள்வதற்கு உதவக்கூடுமென்றபோதிலும் அவை அவற்றை நியாயப்படுத்தமாட்டா. கட்டமைப்புகளையும், செயல்களையும்போன்று பண்பாடுகள் மதிபீட்டிற்கும், விமர்சனத்திற்கும், மாற்றத்துக்கும் உட்பட்டவை. எதிர் பண்பாடுகள் பெரும்போக்குகளாக மாறலாம். நான் பயணஞ்செய்துள்ள இடங்களிலெல்லாம்-பெண்களுக்கெதிரான வன்முறையை, அது பெண்ணுறுப்புச் சிதைப்பதாக நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதாக, மரபுரிமைச் சொத்தை அல்லது வேலையிடத்தில் பாரபட்சமும், தொந்தரவுமாக -எவ்வடிவத்தில் இருந்தாலும் அது பண்பாட்டின்ன் பெயரால் நியாயப்படுத்தப்படும்போது அதிர்ச்சியடைந்து அதனை எதிர்த்துநிற்பதற்கு துணிவுடனும், மனவுறுதியுடனும் செயலாற்றுகின்ற பெண்களைச் சந்தித்திருக்கின்றேன். இவ்வடக்குமுறைக்கான பண்பாட்டு அடிப்படைக்கெதிராக சவால் விடுக்கவேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் அறிந்துள்ளனர். துரதிருஷ்டவசமாக, இன்றுள்ள சிவில் சமுதாயங்கள் இதனை வெளிப்படையாகப் பேசினால் கடுமையான தண்டனையைத் தேடிக்கொள்ளும் அளவுக்கு அடக்குமுறையானவையாயுள்ளன. அத்தகைய சந்தர்ப்பங்களில் சர்வதேச அழுத்தம் நியாயப்படுத்தப்படக் கூடியதாக மட்டுமன்றி, அவசியமானதாகவும் தோன்றுகின்றது. ஒருமைப்பாடும் ஏகாதிபத்தியவாதமும் குழப்பமளிப்பனவாக இருக்கக்கூடும். இருந்தபோதிலும், அவற்றை வேறுபடுத்திக் கண்டறியக்கூடுமென்பதுடன், அவ்வேறுபடுத்தல் செய்யப்படவும் வேண்டும். இது கலாசாரரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஏனைய அடக்குமுறை வடிவங்களுக்கும், அவை சாதி, இன, அடையாளம், பால், தன்மை, திறமை ஆகிய எதனுடன் தொடர்புடையனவாக இருந்தாலும், ஏற்புடையதாகும் .



## 3.2 அதிகாரச் சமச்சீரின்மைகளுக்கும், அநீதிகளுக்கும் தீர்வுகாணுதல்

அடக்குமுறை ஒரு மறைவான அல்லது உள்ளார்ந்த மோதுகையாகக் கருதப்படலாம்: நடைபெறுவதற்கு அல்லது வெளியில் கொண்டுவரப்படுவதற்குக் காத்திருக்கின்ற ஒன்று (பார்க்க கிங் 1963 மற்றும் கேர்ள் 1971). குழுக்கள் தமது அதிகாரத்தை அதிகரித்து, தமது அடக்குமுறையை எதிர்கொள்வதற்குத் தம்மைத் தாமே ஒழுங்குசெய்கின்றபோது அவர்கள் ஆதிக்கத்திலிருந்து விடுவித்துக்கொள்வதற்காக அவ்வாதிக்கக் கட்டுக்கோப்பினுட் செயற்படுகின்றனர். அவர்கள் ஒருவரொருவருடனும், அவர்களை ஆதரிக்கின்ற ஏனையொருடனும் ஒத்துழைப்பாகச் செயற்படும் நிலையில் உள்ளனர். மேலும் அவர்கள் தம்மை அடக்குபவர்கள்மீது ஆதிக்கஞ்செலுத்த முனையத் தேவையில்லை. எனினும், நடைமுறையில் இதிலுள்ள தொடர்பு ஒத்துழைப்புக்கு இடமளிக்காதென்பதனால், அவர்கள் அடக்குபவர்களுடன் ஒத்துழைக்கமுடியாது. மோதுகை மாற்றுநிலையாக்க மாதிரியினுள் அவர்கள் சாத்வீக வழிமுறைகள் மூலமாக தம்மை அடக்குவார்கள்தொடர்பில் தமது அதிகாரத்தை அதிகரிக்க முனைவர். இதனை அவர்கள் செய்தபின்னர் மட்டுந் தான் மோதுகைத்தீர்வின் ஒத்துழைப்புச் செயல்முறைகள் ஒரு யதார்த்தமான விருப்புத்தெரிவாகின்றன.

அதிகாரச் சமச்சீரின்மைகளுக்கும், அவற்றின் விளைவான அநீதிகளுக்கும் தீர்வுகாணுதல் மோதுகை மாற்றுநிலையாக்கத்தின் ஒரு பெரும் ஆக்கக்கூறாயிருப்பின், மோதுகையைத் தடுப்பதற்கும், முடிப்பதற்கும் அதனுடன் இலகுபடுத்தும் இணக்கத்திற்கும் (இது சார்பளவில் அதிகாரச் சமத்துவம்


உள்ளபோது மட்டும்தான் பயனுடையதாயிருக்கும்). மீண்டும் மீண்டும் அளிக்கப்படும் முக்கியத்துவம் விகிதசமமற்றதாகக் காணப்படலாம். மோதுகைத்தடுப்பு என்ற எண்ணப்பாங்கு மோதுகையிலும் மோதுகையுடனும் ஆக்கபூர்வமாக, சாத்வீகமாக ஈடுபடுதலென்ற கருத்துக்கு விட்டுக்கொடுக்கவேண்டும். இக்கருத்துக்கோணத்தில் பார்க்கையில், பக்கச்சார்பின்மைதான் தன்னியக்கமானதும், ஒரேயொரு நல்லதும் அல்ல, இடையீட்டுக்கான பிரதான வடிவமாக பக்கச்சார்பான பாத்திரங்களும், மோதுகையில் ஈடுபட்டடுள்ளவர்களால் ஆக்கபூர்வமான நடவடிக்கைக்கான ஆதரவும் (அவ்வாதரவு பக்கச்சார்பானதாக அல்லது பக்கச்சார்பற்றதாக இருப்பினும் சரி) ஆக்கபூர்வமான வாய்ப்புடையனவாகக் காணப்படலாம்.

உருவம் 1 (கூஸ் மெய்ஜர் உடன் சேர்ந்து விருத்திசெய்யப்பட்டது.) பெரும் அதிகாரச் சமச்சீரின்மையைப் பண்பாகக்கொண்டுள்ள ஓர் அடக்குமுறை நிலைமை அல்லது உள்ளார்ந்த மோதுகை மாற்றுநிலையாக்கப்படக்கூடிய கட்டங்களையும், செயல்முறைகளையும் காட்டுகின்றது. நீள்வட்ட வடிவங்களில் உள்ளடக்கப்பட்ட சொற்கள் மோதுகைக் கட்டங்களை விவரிக்கின்ற அதேவேளையில், செவ்வகப் பெட்டிகளிலுள்ளவை அக்கட்டங்களை எட்டுவதற்கான நடவடிக்கைகளை அல்லது முறைவழிகளை விவரிக்கின்றன. இம்முறைவழிகள் பரஸ்பரம் வலுவூட்டுபவை என்பதனால், அம்புக்குறிகள் வெவ்வேறு திசைகளில் செல்கின்றன. அடக்கப்பட்டடவர்கள் தாம் அடக்கப்படுதலைத் தெரிநிலைக்குக் கொண்டுவருகின்றபோதும் (இம்முறைவழியை பவுலோ பிறெய்றே (1972) “மனச்சான்றைத் தூண்டுதல்” என்றழைத்தார். பின்னர் நடவடிக்கைக்காகத் தம்மையும், ஏனையோரையும் திரட்டுகின்றபோதும் அதிகாரத்தொடர்புகள் மாறத்தொடங்குகின்றன. அணிதிரட்டல் என்பது குழுக்களையும், வலையமைப்புகளையும் உருவாக்குதல், பொதுவான பெறுமானங்களையும், இலக்குகளையும் எடுத்துரைத்தல், பொதுவான உத்தியொன்றை அபிவிருத்திசெய்தல், மோதுகை மாற்றுநிலையாக்கக் கட்டுக்கோப்பினுள் இது சாத்வீகமானதொன்றாய் இருக்கும், எல்லாவகையான ஆதரவையும் கட்டியெழுப்புதல் என்பவற்றை உள்ளடக்கும். அவர்கள் சார்பளவில் தமது சொந்த அதிகாரத்தை அதிகரித்தபின்னரும், அவர்களை அடக்குபவர்கள் வேறுபாடொன்றை உணர்வதற்கு போதுமான துணைவலுவை பெற்றுக்கொண்ட பின்னரும் மட்டுமே அவர்கள் தம்மை அடக்குபவர்களை பயனுறுதியுள்ள வகையில் எதிர்கொள்ளக்கூடியவர்களாக இருப்பர். அவ்வெதிர்கொள்ளல் தனிப்பட்ட சொல்லாடலாக, பகிரங்க நடவடிக்கையாக அல்லது பொரும்பாலும் இரண்டுமாக எவ்வகைப்பட்டதாயினும் இருக்கலாம். 117

அக்கட்டம் எட்டப்பட்டவுடன் மோதுகையின் தீர்வு நியதிகளின்படி சிந்தித்தல் யதார்த்தமானதாவதுடன் புள்ளிகளாலான கோடுகளினுள் காட்டப்பட்ட செயல்முறைகளும் தொடங்கப்படலாம். எனினும், எந்த ஒரு கட்டத்திலும் முன்னேற்றம் சீரானதாக இருக்கமாட்டாதென்பதைக் கவனத்தில்கொள்ளவேண்டும். அவ்வாறே மோதுகை எளிமையானதோ, ஒற்றையானதோ அல்ல என்பதுடன் கட்டங்களும் உண்மையில் ஒருபோதும் ஒன்றிலிருந்து மற்றொன்று தனிவேறானதல்ல. விளக்கவரைபடம் மோதுகையின் குழறுபடியான யதார்த்தத்தைக் குறிக்கவில்லை. மாறாக, அது ஓரளவுக்கு தொடர்விளைவான குறிக்கோள்களின் தொகுதியொன்றைக் குறிக்கின்றது. மோதுகைத்தீர்வின் விளைபயனாக அல்லது உச்சநிலையாக காணப்படக்கூடிய மீள் இணக்கப்பாடு - எப்போதாயினும் எட்டப்படுமாயின் - நடைமுறையில் பெரும்பாலும் பல சந்ததிகளின் பின்னரே எட்டப்படுகின்றது. இருந்தபோதிலும், அது ஒரு செல்லுபடிமிக்க அபிலாஷை என்பதுடன், அது சமுதாயத்தை மீளக்கட்டியெழுப்புவதில் நீண்டகால ஒத்துழைப்பின் ஊடாகவே பெருமளவுக்குச் சாதிக்கப்படும்; திடப்படுத்தப்படும். அதனைப்பேணுவதற்கு ஆக்கபூர்வமான மோதுகை முகாமைத்துவ பண்பாடும், பொறிமுறைகளும் தேவைப்படும். அத்துடன், மோதுகை முகாமைத்துவம் சமுதாயத்தினுள் அதிகாரச் சமச்சீர் இன்மைகளை கையாளுதலை உள்ளடக்கும்.

மோதுகை மறைமுகமான அடக்குமுறையாக இருப்பினும் சரி, பகிரங்கமாக எதிர்த்து நிற்பதாயினும் சரி அதில் சிக்குண்டவர்களாகத் தம்மைக் காணும் பெரும்பாலான மக்கள் அதில் சம்பந்தப்படுவதற்குத் தாமே தெரிந்துகொண்டவர்களல்லர். சிக்கலான அரசியல் நிலைமைகளில் பரந்த

உருவம் 1 : மோதுகைமாற்றுநிலைப்படுத்தலின் கட்டங்கள் மற்றும் முறைவழிகள்



அளவிலான ஒரு குழுவினுள் சார்பளவில் ஒரு சிறிய எண்ணிக்கையினரால் திட்டமிட்ட அரசியல் தீர்மானங்களும், நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்ற அதேவேளையில் எஞ்சியோர் எதுவும் செய்யமுடியாத நிலையில் உள்ளனர். மோதுகை மாற்றுநிலையாக்கத்தின் அம்சம்தான் தற்போது அதிகாரம் ஏதுமற்றவர்கள் ஆக்கபூர்வமான மாற்றத்தைநோக்கி தீவிரமாகச் செயற்படுகின்றவர்களாகின்றவகையில் அவர்களின் மனச்சான்றைத்தூண்டுதல் அல்லது விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகும். அவர்கள் பயனுறுதியுள்ளமுறையில் செயற்படவேண்டுமாயின், மோதுகை தொடர்பில் அவர்களின் சொந்தச்சாத்தியங்கள் எது மாற்றப்பட வேண்டும் என அவர்கள் விளங்கிக்கொண்டுள்ளமையாகும். அவர்களுக்குத் தற்போதுள்ள ஈடுபாடு ஏதேனும் இருப்பின், வெவ்வேறு குழுக்களும், தனிப்பட்டவர்களும் தொடர்பில் அவர்களின் நிலைப்பாடு, அவர்களின் தனிப்பட்ட கொடைகளும், ஆற்றல்களும், அவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆதரவு வடிவங்கள் ஆகியவற்றை அவர்கள் ஆழ்ந்து ஆராயவேண்டும். அவர்கள் தமது சொந்தக்குழு வலுவிழக்கச்செய்யப்பட்டதாக மோதுகைத் தீர்வு ஒரு சாத்தியமாவதற்கு முன்னர் அதன் நிலை பலப்படுத்தப்படவேண்டுமெனக் காண்பார்களாயின், அவர்கள் தமது சொந்தக்குழுவினுள் கல்வி புகட்டுபவர்களாகப் பணியாற்றி, வன்முறையற்ற நடவடிக்கைக்கு அவர்களை ஆயத்தப்படுத்துகின்ற பக்கச்சார்பான ஒரு பாத்திரத்தை அவர்கள் தெரிவுசெய்யலாம். அதிகாரம் கொண்டிருப்பவர்களான ஏனையோர் (பரந்த அளவில் பொதுமக்களும் அரசியல் எதிரிகளும் உட்பட) தொடர்பில் அதற்காக பரிந்து பேசுபவர்களாக கடமை மேற்கொள்ளலாம். அவர்கள் ஏனையோரை எட்டி, அவர்களை ஈடுபடுத்தி செயற்கூட்டமைப்புகளை கட்டியெழுப்புகின்ற இயக்க ஒழுங்கமைப்பாளர்களாக, பகிரங்கத் தீவிர செயற்பாட்டாளர்களாக மற்றும் ஆதரவைக் கட்டியெழுப்புபவர்களாகப், பணியாற்றலாம்.

பிறப்பின்மூலமும் ஏனையோரின் சார்த்துதலின்மூலமும் முரண்படுகின்ற தரப்புகளின் ஒன்றுடன் அல்லது மற்றதுடன் அடையாளப்படுத்தப்பட்டபோதிலும், வேண்டுமென்றே பக்கச்சார்பான பங்கொன்றைவிட, பாலமமைக்கும் பங்கொன்றை வகிக்கவிரும்புகின்ற உள்ளாட்கள் அதிகார சமச்சீரின்மைகளுக்கு தீர்வுகாணும் விடயத்தை ஏனையோரிடம் விட்டுவிடவிரும்பக்கூடும். அவர்கள் அதற்குப்பதிலாக எதிர்த்தரப்பின் பொருத்தமான உறுப்பினர்களுடன் தொடர்பையும், புரிந்துணர்வையும் நிலைநாட்டி பகிரங்கக் கல்வி புகட்டுவோராக அவர்களுடன் செயற்பட்டு, முரண்பாட்டுத் தீர்விற்கான தளத்தை ஆயத்தப்படுத்துவதற்கு உதவுபவர்களாகப் பணியாற்றலாம்.



ஒரு சமச்சீரற்ற மோதுகையில் இப்படிநிலையில் வெளியாட்கள் மோதுகையின் அனைவரையும் உள்ளடக்கும் தீர்வு சாத்தியமாகக்கூடியதாக, ஓர் அடக்கப்பட்ட குழுவின் சாத்வீகமான வலுவளிப்பிற்கு ஆதரவளிப்பதில் ஈடுபடலாம். (கொசோலோவின் அல்பேனிய குடிசனத்தினால் வன்முறையற்ற நடவடிக்கைக்கான பத்தாண்டு இயக்கம் சர்வதேசரீதியாக மிகக்குறைந்த அளவு கவனத்தையும், ஆதரவையும் பெற்றதையிட்டு இப்போது வருந்துவது மிக இலகுவானது). வெளியாட்கள் மனச்சான்றைத் தூண்டுகின்ற மற்றும் ஆற்றலைக் கட்டியெழுப்புகின்ற செயல்முறையில் உதவலாம். அவர்கள் தேவையான வளங்களை வழங்கலாம் (பணம், தகவல், நிபுணத்துவம்). அவர்களை எதிர்ப்பவர்கள் தொடர்பிலும், ஆதரவாளர்களாகும் வாய்ப்புடையவர்கள் தொடர்பிலும், அவர்களுக்காக பரிந்துபேசுபவர்களாக அவர்கள் செயற்படலாம். அவர்களுடனான கூட்டொருமைப்பாட்டில் பொது நடவடிக்கைகளை அவர்கள் எடுக்கலாம். முரண்பாட்டுத்தீர்வு இன்னமும் யதார்த்தமான ஒரு விருப்பத்தெரிவாகாததலால் வெவ்வேறு தரப்புகளுக்கிடையில் இணக்கம் செய்தல் பயனளிக்காதிருக்கலாம். எனினும், வெளியாட்கள் முரண்படுகின்ற தரப்புகளுக்கிடையில் தொடர்பையும், புரிந்துணர்வையும் நிலைநாட்டுவதற்கு உதவுகின்ற பாலம் அமைப்பவர்களாகச் செயற்படலாம் (முன்னிணக்கப்பாடு). சேர்பியன் மொழியில் கொசோவோ என்றும் அல்பேனியன் மொழியில் கொசோவா என்றும் எழுத்துக்கூட்டப்படுவததை ஒப்புக்கொண்டு கொசோவோவா ஓர் அனைத்தையும் உள்ளடக்கும் பதமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

அவர்கள் மனிதஉரிமை கண்காணிப்பாளர்கள் என்ற பங்கையும் வகிக்கலாம். அத்தகைய நிலைமைகளில் பெரும்பாலான மனித உரிமை மீறல்கள் வலுக்குறைந்தவர்கள் தொடர்பில் வலுக்கூடிய தரப்பினால் புரியப்படுவதனால், நடைமுறையில் இக்கண்காணிப்பு பெரும்பாலும் பக்கச்சார்பானதாகவே நோக்கப்படுகின்றது. அடக்குமுறை அதிகாரச் சமச்சீரின்மை தொடர்புடைய தெளிவான ஒருபக்க அநீதி காணப்படும் நிலைமைகளில் வெளியாட்கள் அல்லது மூன்றாந்தரப்பினர் பக்கச்சார்பான பாத்திரங்களை தெரிவுசெய்யக்கூடியபோதிலும், அவர்கள் எதிர்கால இயக்குநர்களாக குறிப்பாக தகுதி பெற்றவர்களாயின், பிந்தியதொரு கட்டத்தில் இலகுபடுத்துகின்ற பங்கொன்றுக்கு இருதரப்புகளாலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவராக தம்மை அளிக்கும் பொருட்டு இக்கட்டத்தில் அவர்கள் ஒருபுறமாக ஒதுங்கியிருக்கத் தீர்மானிக்கக்கூடும். ஏனையோர் குறைந்தபட்சம் பெயரளவிலேனும் இருபக்கங்களுடனும் பணியாற்றத் தெரிவுசெய்தபோதிலும், வலுக்குறைந்த பக்கம் பயனுறுதியுள்ள பேச்சுவார்த்தைக்கு அதன் ஆற்றலை அதிகரிக்கக்கூடியதாக தமது முயற்சிகளை வலுக்குறைந்த அப்பக்கத்தின்பால் ஒருமுகப்படுத்துகின்றனர்.

வலுநீக்கப்பட்ட குழு மோதுகைத்தீர்வு சாத்தியமாவதற்கான போதிய துணைவலுவை எய்தப்பெற்றவுடன், முரண்படுகின்ற தரப்புகளின் உறுப்பினர்களாயிருந்து பக்கச்சார்பான பாத்திரங்களை தெரிவு யெ்தவர்கள் மோதுகைக்கான அணைவரையும் உள்ளடக்கும் ஒரு தீர்வைத் தேடுவதில் தமது சொந்தப்பக்கத்தின் தேவைகளுக்கும், உரிமைகளுக்குமாகப் பரிந்துபேசுபவர்களாகத் தொடர்ந்து செயற்படுவர். பாலம் அமைக்கின்ற பங்குகளைத் தெரிவுசெய்தவர்கள் அவ்வாறே எல்லா மட்டங்களிலும் உரையாடலை ஊக்குவிப்பவர்களாகவும், தாமே அவற்றில் ஈடுபடுபவர்களாகவும், முரண்பாட்டின் சமாதானமான தீர்வுக்காகப் பரிந்து பேசுபவர்களாவும், சமாதான வட்டாரம் ஒன்றைக் கட்டியெழுப்ப உதவுபவர்களாகவும் அவற்றைத் தொடர்வர். ஏதோவொரு காரணத்தினால் இப்பங்கைப் பெரும்பாலும் பெண்கள் எடுத்துக் கொள்கின்றனர். எடுத்துக்காட்டாக சியாரா லியோனில் சமாதானத்திற்கான பெண்களின் இயக்கம் (முன்பிருந்த பெண்களின் அரங்குடன் கூட்டுப்பங்காண்மையில் உருவாக்கப்பட்டது) தீவிரமாக செயற்பட்டதுடன், செல்வாக்குடையதாகவும் இருந்துள்ளது. அத்துடன் ரஷ்யாவில் இராணுவத்தில் கட்டாயமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களின் தாய்மார் செச்னியாவிற்கு எதிரான பகை நடவடிக்கைகளை முடிவிற்குக் கொண்டுவருவதற்கு பாரிய இயக்கமொன்றை நடத்தினர்.



இந்த நிலையை எட்டடியதன்பின்னர் மூன்றாம் தரப்பினர் உகந்தமுறையில் பரிந்துபேசும் பணியை சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு விட்டுவிட்டு, சமாதான வட்டாரங்களுக்கும் தீர்வு செயல்முறைக்கும் ஆதரவளிப்பதற்குத் தமது முயற்சிகளைக் கட்டுப்படுத்திக்கொள்வர். அவர்கள் இப்போது பிரச்சினை தீர்க்கும் செயலமர்வுகள் மற்றும் வேறு முன்பேச்சுவார்த்தை வகைகள் (உத்தியோகபூர்வப் பேச்சுவார்த்தை வகைகள்கூட) அடிமட்டங்களிலும் உள்ளூர் மட்டத்திலும் அவற்றுக்கொத்த உரையாடல் போன்ற உத்தியோகபூர்வமற்ற அரசியல் செயல்முறைகளை இலகுபடுத்தும் இயக்குநர்களாகச் செயற்படலாம். (மூன்றாம் தரப்பொன்று “பேச்சுவார்த்தை” செயல்முறையொன்றையும், அதன் விளைவையும் கூட வலிந்து ஏற்கச்செய்கின்ற அதிகார இணக்கம் - தற்போது கருமங்கள் நடைபெறுகின்ற முறையின் ஒரு பகுதியாக அது இருந்தாலும்கூட - முரண்பாட்டு நிலைமாற்றமென்ற எண்ணக்கருவின் பகுதியல்ல) தீர்வொன்று எட்டப்பட்ட பின்னர், உள்ளூர்மட்டத்தில் தொடரும் பதற்றங்களில் கவனம் செலுத்துவதற்கும், மனஅதிர்ச்சிகளையும், கடந்த காலக் குற்றங்களையும் கையாளுவதற்குமான முயற்சிகள் மூன்றாம் தரப்பு இலகுபடுத்தலினால் பயனடையக்கூடும். வெளிப்புறக் கண்காணிப்பாளர்களுக்கு, உதாரணத்துக்கு மனித உரிமை மீறல்களை அல்லது யுத்தநிறுத்த மீறுகைகளைச் செவ்வைபார்க்கின்ற ஒரு பாத்திரம் இருக்கக் கூடும். வன்முறை மோதுகையினால் பாதிக்கப்பட்ட சமுதாயங்களின் பங்கேற்பு ஜனநாயக அரசியலை (மீளத்) தாபித்தலும் (இது மேற்கத்திய மாதிரியில் இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை),

மோதுகையை ஆக்கமுறையாகக் கையாள்வதற்கான ஒரு பண்பாட்டை, கட்டமைப்புக்களையும், திறன்களையும், அபிவிருத்தி செய்தலும் சமாதானத்தைப் பேணுவதற்கு இன்றியமையாதனவாக இருக்கும். மோதுகை நாளாந்த வாழ்க்கையில் இருந்து பிரித்தறியமுடியாததாக இருப்பதனாலும், அதிகாரச் சமச்சீரின்மைகளை இடைவிடாது சமாளிக்கவேண்டியுள்ளதனாலும், விலக்கல்களிலும், அநீதிகளிலும் கவனஞ்செலுத்தவேண்டியுள்ளதனாலும் எதிர்கால வன்முறையை அது பண்பாடு சார்ந்ததாயினும் சரி, கட்டமைப்புச் சார்ந்ததாயினும் சரி அல்லது நேரடியானதாயினும் சரி, தடுப்பதற்கு இந்த இயலலுமைகளை விருத்திசெய்தல் இன்றியமையாததாகும். மோதுகையின் எல்லாப் படிநிலைகளிலும்போன்று, சமாதானத்தைக் கட்டியெழுப்பும் இந்த படிநிலை ஆக்கபூர்வமான பக்கச் சார்புக்குழுக்களுக்கு, பாலம் அமைப்பவர்களுக்கு, மனித உரிமைக் கண்காணிப்பாளர்களுக்கு, ஜனநாயகத்துக்காக உழைப்பவர்களுக்கு அல்லது ஏனையோருக்கு எந்த மட்டத்திலாயினும் பயிற்சியும் உற்சாகமும் வழங்குதலென்ற வடிவத்தில் வெளியார் ஆதரவு ஒரு முக்கிய பங்கு வகிக்கலாம். எவ்வாறாயினும், அது உள்ளூர் பண்பாடு, கண்ணோட்டங்கள், விவேகம் யாதார்த்தங்கள் என்பவைபற்றிய நெருங்கிய கவனத்துடன் தேர்வுமுறைப்படியும் கூருணர்வுடனும் வழங்கப்படவேண்டும். முன்னரே தயாரிக்கப்பட்ட போதனைப்பாங்கான பொதிகளுக்குப்பதிலாக எளிதில் இசைந்து கொடுக்கின்ற சூழமைவுகுறித்த பரந்த அளவில் மெய்மை வெளிப்படுத்தல் அணுகுமுறை ஒன்று தேவை என்பதே இதன் கருத்தாகும் (லெடராச் 1995).

## 3.3 சமத்துவத்தை ஆதரித்தல்தொடர்பான இக்கட்டு நிலைகள்

பெண்கள் சர்வதேசரீதியான “விமென் இன் பிளாக் போன்ற பெண்கள்மட்டும் குழுக்களாயினும் சரி அல்லது பால் நிலை விணைப்பு நிறுவனங்களின் முதுகெலும்பாகவாயினும்சரி, மோதுகை மாற்றுநிலையாக்க செயல்முறைகளில் மிகத்தீவிரமாகச் செயற்படுகின்றனர். யுத்தத்தை எதிர்த்து சமாதானத்துக்காக் குரல் கொடுத்தல், வெவ்வேறு குழுக்களுக்கிடையில் சொல்லாடலை பேணி வளர்த்தல், மனித உரிமைகளுக்காக உழைத்தல், அகதிகளுக்கும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஏனையோருக்கும் ஆதரவளித்தல் அல்லது எல்லா வயதினருக்கும் சமாதானக் கல்வியை விருத்திசெய்தல், எனவே சமூகமற்றும் அரசியல் வாழ்வில் ஒரு முழுமையான பாத்திரத்தை வகிப்பதில் அவர்களுக்கு உதவுதல் மற்றும் அவர்கள் தீர்ப்பதற்கு உதவுகின்ற அரசியல் மோதுகையை மாற்றுநிலையாக்கம் செய்தல் ஆகிய இரண்டு விடயங்கள் ரீதியாகவும் பெண்களின் பணியை ஆதரித்தல் ஆக்கவளமுடையதாகும். எனினும், ஏற்கனவே குறிப்பிட்டவாறு யுத்தங்கள் பெண்களின் உரிமைகளுக்காக புரியப்டுவதில்லை என்பதனாலும், அவற்றை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான இராணுவ மற்றும் அரசியல் தீர்மானங்களில் அவர்கள் பெரும்பாலும் சம்பந்தப்படுவதில்லை என்பதனாலும், யுத்தம் முடிவடைந்தவுடன் பெண்களின் பங்களிப்பு உரிமைகளும் மிகப்பெரும்பாலான சந்தர்ப்பங்களில் புறக்கணிக்கப்படுகின்றன. சில சமயங்களில் ஒரு மோதுகைக்கான உத்தேச தீர்வு சிறுபான்மைக் குழுக்களுக்குக் கூடிய தன்னாதிக்கமும், அவர்களின் சொந்தக் பண்பாட்டிற்கும், பாரம்பரியத்திற்கும் இணங்க, அதாவது பெரும்பாலும் பெண்கள் தொடர்பில் அடக்குமுறையானதாக அக்குழுவினுள் காணப்படும் மேலாண்மைப் பண்பாட்டிற்கு இணங்க- சிவில் வாழ்க்கையை ஒழுங்குசெய்கின்ற சுதந்திரமுமாயிருக்கும் (பார்க்க சகல் மற்றும் யுவல் டேவிஸ் 1992). எனவே, அநேக சூழ்நிலைகளில் அவர்கள் விடுதலைக்குப் பங்களித்த அவர்களின் இனக்குழுவின் அல்லது கலாசார குழுவின் விடுதலைக்குப் பின்னர் அப்பெண்களின் விடுதலைக்கான தேவை ஆண் தலைமைத்துவத்தினால் புறக்கணிக்கப்படுகின்றது அல்லது மறுக்கப்படுகின்றது. அதனால் பெண்களின் நிலை முன்னேற்றப்படுவதில்லை அல்லது மேலும் மோசமடைகின்றது. மேலும் பொதுவாக யுத்தத்திற்குப்பிந்திய நிலைமைகளில் மோதுகைக்கு சாமாதானத் தீர்வொன்றைத் தேடுவதில் ஒரு முக்கிய பங்கு வகித்தவர்கள் அல்லது யுத்தமொன்றின்போது புதிய பாத்திரங்களை ஏற்றவர்கள் தோற்றத்தில் ஒரு சமாதானம் ஈட்டப்பட்டவுடன் திரும்பவும் ஓரங்களுக்குத் தள்ளப்படுகின்றனர். ஓரங்கட்டப்பட்ட இனக்குழும அரசியற்குழுக்கள் தொடக்கத்திலிருந்து முடிவுவரை சுற்றயலில் தொடர்ந்து

இருக்கின்றனர். அவர்கள் ஒத்துத் தந்திரமாகச் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்அல்லது குறுக்குச்சண்டையில் சிக்கிக் கொள்கின்றனர். மேலும், ஏதேனும் தீர்வின் எற்பாடுகளில் இருந்தும் அத்துடன்/அல்லது அதன் நடைமுறைப்படுத்தலிலிருந்தும் பெரும்பாலும் அவர்கள் விலக்கப்படுகின்றனர். வன்முறையினதும், துன்பங்களினதும் மட்டங்கள் உயர்வாயுள்ளபோது உடனடியானதும், அவசரமானதுமான தேவைகளுக்கும், தீர்வுகளுக்குமான நடவடிக்கைகளிலும், இடையீடுகளிலும் கவனம் செலுத்தவேண்டும் என்ற வலுவான தார்மீக அழுத்தம் காணப்படுகின்றது. இது நடைமுறையில் உள்ள கலாசார மட்டுப்பாடுகளினுள்ளும், அதிகார யதார்த்தங்களிலும் பணியாற்றுகின்ற போக்கை ஏற்படுத்துகின்றது. பெண்கள் மட்டுமன்றி முரண்பாட்டின் பிரதான அச்சுக்கு வெளியேயுள்ள பண்பாட்டு சிறுபான்மைகளும் (எடுத்துக்காட்டாக தென்கிழக்கு ஐரோப்பாவில் ரோமா) உச்சமட்டத்திலிருந்து விலக்கப்படுகின்ற அதேசமயம் அவர்கள் தாமே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வெளிப்படையான அரசியல் ஈடுபாட்டைத் தவிர்ப்பவர்களாகவும், செயற்படுநர்களாக காணப்பட விரும்பாதவர்களாகவும் இருப்பதனால் ஒவ்வொரு போக்கும் மற்றதற்கு உரமூட்டுகின்றது. எனவே, வன்முறையான அரசியல் மோதுகையின் தீர்வைநோக்கிய துரிதமான முன்னேற்றத்திற்கு ஆதரவாக இடையீடுசெய்ய விரும்புபவர்கள் பெரும்பாலும் தமது கவனம் முழுவதையும் முக்கிய செயற்படுநர்கள் மீது செலுத்துவார்கள் என்பதால், அது பெண்களுக்கும், வலுக்குறைந்த சிறுபான்மைக் குழுக்களும் ஓரம் கட்டப்படுதலை உறுதிப்படுத்துகின்றது. வேறு வகையில் கூறுவதாயின், சமூகமாற்றத்தை உள்ளடக்கிய மோதுகை மாற்றுநிலையாக்கத்தின் நீண்டகால இலக்குகளுக்கும், விழுமியங்களுக்கும் மறுபுறத்தில் அரசியல் வன்முறை உடனடியாக முடிவுக்குக்கொண்டுவரும் குறுகியகால இலக்குக்கும் இடையில் ஓர் உறவு நிலை காணப்படுகின்றது.



## பெட்டி 1 சர்வதேச இயக்கம் “சமாதானத்தைக்கட்டியெழுப்பும் பெண்கள்”

சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் பெண்களின் பங்கை வலுப்படுத்தும்பொருட்டு பிரித்தானிய அரசசார்பற்ற நிறுவனமான இன்ரநஷனல் அலேர்ட் (IA) “சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பெண்கள்: கிராமசபையில் இருந்து பேச்சுவார்த்தை மேசைவரை” என்ற பெயரிலான சர்வதேச இயக்கம் ஒன்றை ஆரம்பித்து வைத்துள்ளது. “IA” பின்வரும் வேண்டுகோள்களில் ஒப்பமிட்டு அதனைச் பலரிடையே பரப்புமாறு அழைப்பு விடுத்து ஐ.நா செயலாளர் நாயகம் கொ.ஃபிஅனானுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் பகிரங்கக்கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

“அன்புள்ள செயலாளர் நாயகம் கொபிஅனான் அவர்களே,
ஐக்கிய நாடுகளினால் சமாதானத்துக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை உலகெங்கிலும் உள்ள பெண்கள் பாராட்டிப் புகழ்கின்றனர். ஐ.நாவிற்குள்ளேயே சமாதானத்தை ஏற்படுத்துகின்ற மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புகின்ற முயற்சிகளில் பெண்களை உள்ளடக்குவதில் காணப்பட்ட முன்னேற்றத்தையும், 1995 இல் பெண்கள் பற்றிய ஐ,நாவின் நான்காவது உலகமாநாட்டில் பெண்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளையும் பெண்கள் அங்கீகரிக்கின்றனர். எனினும் ஐந்தாண்டுகளின் பின்னரும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு போதியன எவையும் செய்யப்படவில்லையென நாம் நம்புகிறோம். சமுதாயத்தில் எல்லாமட்டங்களிலுமுள்ள பெண்களின் முழுமையான பங்கேற்புடன் மட்டும்தான் நின்று நிலைக்கக்கூடிய சமாதானத்தை சாதிக்க முடியும் என்பதால் அவை நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். பெண்களுக்காக அவை ஏற்றுக்

கொள்ளப்பட்டுள்ள ஈடுபாட்டுக் கட்டுப்பாடுகளை நிறைவேற்றும்படி சர்வதேச சமூகத்தையும் அரசாங்கங்களையும், ஐக்கிய நாடுகளையும் நாம் கேட்கின்றோம். அவையாவன:

* சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தீர்மானம் எடுப்பவர்களாக பெண்களை உள்ளடக்குதல்.
* புனரமைப்பு மற்றும் மீள் இணக்கத்தில் மையப்பங்கு வகிப்பவர்களாகப் பெண்களை ஈடுபடுத்துதல்.
* அகதிகளாகவும், இடம் பெயர்ந்தவர்களாகவும் உள்ள பெண்களின் பாதுகாப்பையும், பிரதிநிதித்துவத்தையும் வலுப்படுத்துததல்.
* பெண்களுக்கெதிராக புரியப்பட்ட குற்றங்களுக்கு தண்டனை விலக்குரிமையை இல்லாததாக்குதலும், நிவாரணத்தை உறுதிப்படுத்தலும்.
* சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும், பெண்களுக்கும், பெண்களின் நிறுவனங்களுக்கும் தேவையான ஆதரவையும், வளங்களையும் கொடுத்தல்.

இதன் ஒழுங்கமைப்பாளர்கள் குறைந்தபட்சம் 250, 000 கையொப்பங்களையாவது சேகரிக்கும் இலக்கைக் கொண்டுள்ளனர். உலகெங்குமுள்ள 100க்குக் மேற்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஆதரவைப்பெற்றறுள்ள இப்பிரசாரம் - உள்ளூர் ரீதியாகவும், தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாவும் - சமாதானச் செயல் முறைகளின் எல்லா மட்டங்களிலும் பெண்களின் பங்கேற்பை வலுப்படுத்துவதற்கு உலகளாவிய கொள்கை மாற்றங்களைச் சாதிப்பதற்காக பணியாற்றுகின்றது. சமாதான முறைவழிகளில் தனித்தன்மை இடையீடுகளில் ஆளணியினரின் தெரிவு தொடர்பில் தாற்பரியங்களை கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக இலங்கையில் நிறுவனம் ஒன்று அங்குள்ள அரசியல் தலைமைத்துவத்தை அணுகுதலும், அதன் நம்பிக்கையைப் பெறுதலுமே அதன் முதலாவது அக்கறையாக இருந்ததனால், உத்தியோகபூர்வமற்ற அரசியல் இணக்குவிப்பில் எல்லோரும் ஆண்களாயுள்ள அணிகளை வேறுவழியின்றிப் பயன்படுத்தியதை நான் அறிவேன்.

ஒரு குறிப்பிட்ட சூழமைவில் பிரதான அரசியல் செயற்பபாட்டாளர்களால் தீர்வான நடவடிக்கையென காணப்படும் தேவைக்காக உள்ளக ஜனநாயகம் கைவிடப்படும்போது, மோதுகை மாற்றுநிலையாக்கத்தின் நீண்டகால இலக்குகளுக்கும், நடைமுறையில் உள்ள அதிகாரக் கட்டமைப்புக்களை பயன்படுத்துகின்ற குறுகியகால உகந்தநிலைக்கேற்பப் பொருந்துவதற்கும் இடையிலான இந்த உறவுமுறை உணரப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, தீர்வு ஒன்றை எட்டவேண்டும் என்ற அவசர உணர்வுகொண்ட தலைவர்கள் பேச்சுவார்த்தை முறைவழியின்போது தமது தொகுதி மக்களுடன் போதியளவு கலந்தாலோசிப்பதில்லை. பேச்சுவார்த்தைகளில் பெரும்பாலும் இன்றியமையாததாயுள்ள இரகசியத்தன்மை, பதில் சொல்லும் பொறுப்பிற்கும், உள்ளக ஜனநாயகத்தினைக் கட்டியெழுப்பபுவதற்கும் எதிரானதாக மோதுகின்றது. யுத்தநிறுத்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கான அல்லது தீர்வு ஒன்றை உறுதிப்படுத்துவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருப்பவர்கள் பெரும்பாலும் தமது அதிகாரத்தை ஏற்கனவே துஷ்பிரயோகம் செய்தவர்களாகவோ அன்றேல் தொடர்ந்தும் அத்தவறினை செய்துகொண்டிருப்பவர்களாகவோ இருப்பார்கள். இங்குள்ள பிரச்சினை ஒன்றே. நீண்டகால சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நிலைமை ஒன்றை எட்டும்பொருட்டு நடைமுறையில் உள்ள அதிகாரத் தொடர்புகள் ஊடாகச் செயல்பட வேண்டியது அவசியமாகிறது.

ஆனால் அவ்வதிகாரத் தொடர்புகள் தம்மளவில்,நியாயமான ஒரு சமாதானத்தை எட்டுவதற்கு தடைசெய்வனாவாகவோ மோதுகையாகத் தொழிற்படுவனவாகவோ காணப்படுவனவாகவே இருக்கும். இதன் காரணமாக நியாயமான சமாதனத்திற்கு வேண்டியனவற்றிற்கு எதிராக காணப்படும் நிலை ஏற்படலாம். இதன் பலாபலன் யாதெனில், ஓரங்கட்டப்பட்ட குழுமங்களின் நீண்டகால தேவைகள் கருத்தில் கொள்ளப்படாது போய்விடுவதுதான்.

*3. மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ள qendexcampaiqn@international-alert.org அல்லது பார்க்க இன்டர்நஷனல் அலேர்ட்டின் www.internatioanalalert.org வலைக் கடப்பிடத்தை*

ஆயுதமேந்திய “சமாதானம் பேணுபவர்களை” அல்லது சமாதானத்தைச் செயற்படுத்துபவர்களை பயன்படுத்துதலும் வேறொரு வகையில் அதே இருதலைப் பொறிநிலையை ஏற்படுத்துகின்றது. ஆதிக்கம் செலுத்துகின்ற அல்லது கட்டாயப்படுத்துகின்ற அதிகாரத்தைப் பிரயோகிப்பதன் மூலம் அவர்கள் யுத்தங்களாக வெடிக்கின்ற பொறிமுறைகளினதும், தொடர்புகளினதும் ஒரு தொடர்ச்சியாக அமைகின்றனர். எனினும், பெரும்பாலும் அவற்றிலிருந்து விடுபடுவதற்கான ஒரே ஒரு காரியசாத்தியமான வழியை அவர்கள் வழங்குவதாகத் தோன்றுகிறது. கட்டாயப்படுத்தும் அதிகாரத்தின் ஒரு மாற்றத்தையும் அவர்கள் குறிக்கின்றனர். சிறப்புநிலையாக ஒரு சுயநல ஆதிக்கக் கருவியாக இருப்பதற்குப்பதிலாக அது கூடிய சமநிலையான ஒத்துழைப்பான தொடர்புகளைத் தாபிப்பதற்கான ஓர் அவகாச வாய்ப்பை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. எனினும், மோதுகை தொடர்ந்தும் இருக்கின்றது. சமாதானம் மற்றும் மனித உரிமைகளின் கண்காணிப்பை விருத்தி செய்தல் வாதரீதியாக பிரச்சினை குறைந்தது. மேலும், ஆயுதம் அற்ற சமாதானம் பேணுதல் என்ற கருத்து உலகெங்கும் அனேக குழுக்களால் விருத்திசெய்யப்பட்டு முன்னோடியாக மேற்கொள்ளப்படுகின்றன. எவ்வாறாயினும், அத்தகைய படைகள் அல்லது அணிகள் வெளிப்படுத்தும் செய்தியின் காரணமாகவும், அது கொண்டு வருகின்ற ஆற்றல்களின் காரணமாகவும் அவற்றின் ஆக்க அமைவு பால்நிலை, இனத்துவம் மற்றும் பிற அடையாளங்கள் தொடர்பில் கலப்பானதாக இருக்கவேண்டியது முக்கியமானதாகும். அது ஆட்சேர்ப்புக் கட்டத்தில் சமவாய்ப்புக்களுக்கான ஒரு விடயமாகவும் இருக்கும்.



யுத்தத்தின் நடைமுறை யதார்த்தங்களுடன் இணைந்து, மேலே குறிப்பிட்ட இருதலைப்பொறிநிலைகளுக்கு அடிப்படையாயுள்ள சமத்துவம் மற்றும் அனைவரையும் உட்படுத்தல் பற்றிய பெறுமானங்கள் என்பவை ஒரு குறிப்பிட்ட அடையாளக்குழுவின் பெறுமானங்களாகும். மோதுகை மாற்றுநிலையாக்க ஆதரவாளர்களினாலும், அவர்கள் வருகின்ற (பண்பாட்டு ரீதியான, தாராளவாத தத்துவரீதியாக சமத்துவவாதமாக ஜனநாயக தன்மை கொண்டதாக, சமூக, பொருளாதார நீதியில் அக்கறைகொண்ட, அரசியல்ரீதியாக யுத்தம் குறித்து வருந்துகின்ற) பரந்த பெறுமானக்குழுவினாலும் உருவாக்கப்பட்ட பெறுமானங்கள் ஆகும். அப்பெறுமானங்கள் எந்தவொரு பண்பாட்டிற்கும் வரையறுக்கப்பட்டனவோ அல்லது எந்தவொன்றிலும் முழுமையாகக் காணப்படுவனவோ அல்ல. ஆனால், அவை தாமே ஒரு பண்பாடாக அமைகின்றன. அதன் சொந்த நீண்டகால மற்றும் குறுகிய கால நிகழ்ச்சி நிரல்களைக் கொண்டதாக எங்கணும் காணப்படும் ஆதிக்கப் பண்பாட்டிற்கு அவை தெளிவாக எதிரானவை. அவை பாலியல்வாதம், இனவாதம் மற்றும் எல்லாவகையான பாரபட்சங்களுக்கும் எதிரானவை. இதனை நேர்மையுடன் ஒப்புக்கொள்ளவேண்டும். அவை மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்காகப் பணியாற்றுபவர்கள் தமது பணியினை மதிப்பான, ஆதிக்கம் செலுத்தாத முறைகளில் அவற்றின் சொந்தக் கோட்பாட்டிற்கும், பெறுமானங்களிற்கும் இணங்க செய்யவேண்டுமெனவும் சவால் விடுக்கின்றன.

எனது அடுத்த பிரிவில் மோதுகை மாற்றுநிலையாக்கப்பணியினை மதிப்பளிக்கின்றதாகவும், பொறுப்புணர்வுடனும் செய்கின்ற வழிகளை நான் ஆராயவுள்ளேன். வேறுவகையில் கூறுவதாயின் இது நல்ல நடைமுறை.

# 4 நல்ல நடைமுறை

## 4.1 நிறுவனங்களில் பண்பாட்டு கூருணர்வு, பால்நிலைச் சமத்துவம் மற்றும் மதிப்பளிக்கின்ற அதிகாரப்பிரயோகம்

மோதுகை மாற்றுநிலையாக்கக் கோட்பாட்டையும், நடைமுறையையும் ஊக்குவிக்க விரும்புபவர்களுக்கான முதலாவது சவால் ஆதிக்கம் செலுத்தாத, மதிப்பளிக்கின்ற பண்பாடு , கட்டமைப்புக்கள், செயல்முறைகள் ஆகியவற்றை விருத்திசெய்தலும், அவற்றைத் தமது சொந்த நிறுவனங்களில் கடைப்பிடித்தலும் ஆகும். அத்தகைய நிறுவனங்களால் பெறப்படும் முன்னுதாரணம் பன்மடங்காக குறைக்கும் விளைவைக் கொண்டிருக்கக் கூடும். எவ்வாறாயினும், விழுப்பம் அதனை அவசியப்படுத்துகின்றது.

* **நிறுவனம்சார்ந்த பண்பாட்டில் மதிப்பை உள்ளடக்குதல்**
  இது அடிப்படையானதென்பதுடன், ஒளிவுமறைவற்ற நிறுவனம் சார்ந்த பெறுமானங்களின் அளபுருக்களினுள் வெவ்வேறு பண்பாட்டு, பால்நிலை மற்றும் பிற அடையாளங்களிற்கான மதிப்பையும், சிறுபான்மைகளின் தேவைகளிற்கும், உரிமைகளிற்குமான மதிப்பையும் உள்ளடக்குதல் வேண்டும். இப் பண்பாடு நிறுவனத்தின் கூட்டுத்தொலைநோக்கிலும், அதன் பணியிலும், இலக்குகள்பற்றிய அதன் பேச்சிலும், அதன் கொள்கைகளிலும், பிரசித்தப்படுத்தலிலும், அதன் ஒழுக்க நிலையிலும் வெளிப்படுத்தப்படும்.



* **சமவாய்ப்புக்கொள்கையை உருவாக்குதலும், நடைமுறைப்படுத்தலும்.**
  ஊதியமளிக்கப்படும் மற்றும் தன்னார்வப்பணியாளர்களின் ஆட்சேர்ப்புக்கும், தெரிவுக்கும், சபைக்கான நியமனங்களுக்கும் அத்துடன் நிறுவனத்தினுள் அபிவிருத்திக்கும், பதவியுயர்வுக்கும் (நிச்சயமாக சம்பளத்துக்குமான) சம வாய்ப்புகளுக்கான கொள்கையை உருவாக்குவதும், நடைமுறைப்படுத்துவதும், மேலும், வெளிக்கள வேலை ஒன்று வருகின்றபோது உடனடி இலக்குகளுக்கான தடைகளை அதிகுறைவாக்குவதற்காக உள்ளூர் வழக்கத்துக்கு அடிபணிவதற்கு எதிராக, உதாரணத்துக்கு, உள்ளூர் சூழமைவில் பெண்கள் வழமையாக வகிக்காத அல்லது அவர்கள் அவற்றை வகித்தல் ஏற்றுக்கொள்ளப்படாத பதவிகளுக்குப் பெண்களை நியமிப்பதன்மூலம் உள்ளூரின் மாறாநிலைக்கருத்துகளுக்கு சவால் விடுத்தலைத் தெரிவுசெய்கின்ற இருதலைப்பொறிநிலையை எதிர்கொள்ளவேண்டும். முன்னையது தெரிவுசெய்யப்படுமாயின், அதன்மூலம் விலக்கப்பட்டவர்களின் கலந்தாலோசனையுடன் அத்தெரிவும், அதன் பின்னணியில் உள்ள காரணங்களும் வெளிப்படையாக்கப்படவேண்டும். சம்பந்தப்பட்ட நிறுவனம் ஒரு குறிப்பிட்ட அடையாளக்குழுவின் சார்பாகப் பணியாற்றுகின்றபோது, அக்குழுவின் உறுப்பினர்கள் அந்நிறுவனத்தினுள் முக்கிய பதவிகளை வகித்தல் பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால், இதனைத் தெளிவாகவும், நேர்மையாகவும், காரணகாரிய தொடர்புடனும் தெரிவிக்கவேண்டும். அதிகார பண்பாடு மற்றும் (அதுவொரு பெண்களின் நிறுவனமாக இல்லாவிடின் பால்நிலை உட்பட) அடையாளத்தின் பிற அம்சங்கள் தொடர்பான அணுகுமுறைகள்பற்றிய கேள்வி தொடர்ந்தும் ஏற்புடையாதாக இருக்கும்.

* **“அவர்களுடன், அவர்களுக்கான அதிகாரம்” என்ற அணுகுமுறையை உள்ளடக்குகின்ற நிறுவனக் கட்டமைப்புக்களையும் நடைமுறைகளையும் உருவாக்குதல்**
  படிநிலை அமைப்புக்குப்பதிலாக பொறுப்பினதும் அதிகாரப் கருமப்பாட்டினதும் நியதிகளின்படி

வடிவமைக்கப்பட்டதும், கற்றுக்கொள்வதற்கும், தீர்மானங்களைத் தயாரிப்பதற்குமான ஒத்துழைப்புச் செயல்முறைகளை, நிறுவனங்களை அமைத்தல். பங்கேற்புச் செயல்முறையில் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளலும் தரக்கட்டளைகளைத் தாபிப்பதற்கும், எல்லைக் குறியீட்டினை வழங்குவதற்குமான நடைமுறைக்கோவைகளைக்கொண்ட, ஒளிவுமறைவற்ற, தெளிவான இலக்குகளையும், யதார்த்தங்களையும் அவசியப்படுத்தும்.

## 4.2 இடையீட்டில் பண்பாட்டுக் கூருணர்வு, பால்நிலைச்சமத்துவம் மற்றும் மதிப்பளிக்கின்ற அதிகாரப்பிரயோகம்

மோதுகை இடையீடு என்ற சொற்றொடர், சம்பந்தப்பட்ட செயற்பாட்டாளர்கள் மோதுகைப் பிரதேசத்துக்கு வெளியிலிருந்து வருபவர்களென்ற கருத்தைக்கொடுக்கக்கூடும். மோதுகை மாற்றுநிலையாக்கமும், மதிப்பளிக்கின்ற அதிகாரப் பிரயோகமும் தொடர்பில் கவனஞ்செலுத்தவேண்டிய முதலாவது விடயம் இதுவே. மோதுகையை மாற்றுநிலையாக்குவதில் பிரதான செயறபாட்டாளர்கள் யார்? நெறிமுறைப்படியும், நடைமுறைப்படியும் அதனால் பெரிதும் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களே தானென்று நான் வாதிடுவேன். நல்ல நடைமுறைக்கான பின்வரும் ஆலோசனைகள் ஒன்றில் உட்புறச் செயற்பாட்டாளர்களுக்கு, இன்றேல் வெளியிலிருந்து இடையீடு செய்பவர்களுக்கு அல்லது இருபாலாருக்கும் ஏற்புடையமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. எனினும், சில தெளிவாகவே, பிரதானமாக வெளியாட்களைத் கருத்திற்கொள்வனவாகும்.

- **பண்பாடு பற்றிய விடயங்களில் வெளிப்படையான கவனஞ்செலுத்தல்-** முன்னீடான ஆராய்ச்சி மற்றும் கருத்திட்ட/நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பில் மோதுகைக் குழுக்களினுள்ளும், அவற்றுக்கிடையிலும் கலாசார வேறுபாடுகளை இனங்காணலும் அவை எவ்வாறு அதிகாரத்துடன் தொடர்புடையன என்று புரிந்துகொள்ளலும்.



- **பண்பாட்டு வேறுபாடுகளை இனங்காணல் -** வெளியிலிருந்து இடையீடு செய்கின்ற எவருக்கும், மோதுகையில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் இடையிலான மேலும் சம்பந்தப்பட்ட மனித உயிர்களுக்கு மதிப்பளித்தல் தொடர்பாகவும், மோதுகையில் கவனஞ்செலுத்துவதற்குத் தேவைப்படுவது தொடர்பாகவும் வேறுபாடுகளின் தாற்பரியங்களை ஆராய்ந்து பார்த்தல்.

- **மோதுகையினால் பெண்கள் பாதிக்கப்படுகின்ற முறைகளிலும், மோதுகையின்மீது பெண்கள் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முறைகள்பற்றியும் வெளிப்படையான கவனஞ்செலுத்துதல்-** எந்தவோர் இடையீட்டிலும்-குறுகிய கால மற்றும் நீண்டகால அடிப்படையில்-பெண்களுக்கு வலுவளிப்பதற்குப் பங்களிக்கின்ற வாய்ப்புவளம் பற்றி ஆராய்தல்; சாத்தியமானவிடத்து ஓரங்கட்டப்பட்ட குழுக்களுடனான பணியை உள்ளடக்க முனைதல்.

- **மோதலினுள் நிலவும் அதிகாரச் சமச்சீரன்மையின் வகிபாகம்பற்றி வெளிப்படையான கவனஞ்செலுத்துதல்-** மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கு ஆதரவாகப் பயனுறுதியுள்ள நடவடிக்கைபற்றிய நன்கு அறிவூட்டப்பட்ட தீர்மானங்களை எடுக்கும்பொருட்டு-தரப்புகளால் இவை தத்தம் நலத்துக்குப் பயன்படுத்தப்படும் மற்றும் அனுபவிக்கப்படும் முறைகள்மீது கவனம்செலுத்தல்.

- **எடுக்கப்படும் உத்தேச நடவடிக்கை மாறிக்கொண்டிருக்கும் அதிகார அசைவியக்கத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கம் பற்றிய மதிப்பீடு** ஒருவரின் சொந்த அதிகாரத்தினதும், பொறுப்பினதும் அளவும், எல்லைகளும்பற்றி அறிந்திருத்தலும் கலாசார/அதிகாரக் கண்ணோட்டங்கள் மற்றும் மொழியாற்றல்கள் தொடர்பில்கூருணர்வுடையவராயிருத்தல், மேலாண்மை செலுத்துவதற்கு (கவனக்குறைவாகத்தன்னும்) மொழியைப் பயன்படுத்தாதிருத்தல், பங்காளிகளுடன் தெளிவான உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதலும், பெறுமானங்களும் இலக்குகளும்பற்றி வெளிப்படையாயிருத்தலும்.

- **ஆக்கபூர்வமான பாத்திரங்களின் முழுவீச்சையும் கவனத்தில்கொள்ளுதல்**
  சாத்தியமானவை, அவை யாருக்குப் பொருத்தமானவையென்பது, பக்கச்சார்பானவை, (முறைவழிகள் மற்றும் ஆற்றல்கள் தொடர்பில் இலகுபடுத்துபவை/ஆதரவளிப்பவை). அத்துடன் ஒரு தெளிவான வெளிப்படையாக தெரிவு செய்துகொள்ளுகை. மோதுகைக்குத் தரப்பினர்களாக உள்ளவர்களைவிட மூன்றாந்தரப்பினர் முக்கியம் குறைந்தவர்கள் (அல்லது அவ்வாறு இருக்கவேண்டும்) என்பதை மனதில் நிறுத்தி ஆக்கபூர்வமான பாத்திரங்களின் முழுவீச்சையும் கவனத்தில்கொள்ளுதல். திணிக்க முனைவதிலும் பார்க்க கொள்நெறி நிலைப்பட நின்று பேசுவதே, அதிகாரம் அவர்களுக்கும், அவர்களுடனும் என்ற கோட்பாட்டின்படி செயற்படுதல்.

- **தனிப்பட்ட நிலையிலோ, நிறுவனரீதியிலோ ஒருவர் அதிகார வேட்கையுடன் இருப்பதென்பதை அறிந்து தேவையென்ற அல்லது விருப்பென்ற செயல்நோக்கம்பற்றி எச்சரிக்கையாயிருத்தல்:** உத்தேச நடவடிக்கை உண்மையில் பயனுடையதாக இருக்குமாவென்றும், அதனைச் செய்வதற்கு நல்ல ஏற்பாடுகளைக்கொண்டவர் யாரென்றும் கேட்டுக்கொள்ளல். தனிப்பட்ட மற்றும் நிறுவனரீதியான சுயவிழிப்புணர்வை வலுப்படுத்துவதற்கும், இருதலைப்பொறி நிலைகளையும், மோதுகைகளையும் எதிர்கொண்டு மல்லாடுவதற்கான விருப்பை உருவாக்குவதற்கும் பதவியினருக்குப் பயிற்சியளித்தல். நடைமுறையின் எல்லா அம்சங்கள் தொடர்பிலும் பின்னூட்டல். கண்காணிப்பு, மீட்டல், மதிப்பீடு மற்றும் சீராக்கம் ஆகியவற்றுக்கான முறைவழிகளை உள்ளமைத்தல்.

## 5. தொடரும் கேள்விகளும், கண்ணோட்டங்களும்

மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்காகப் பணியாற்றுபவர்கள் அவர்கள் ஆதரிக்கின்ற கோட்பாடுகளும், பெறுமானங்களும் நடைமுறையிலான யதார்த்தங்களுடன் விதிவிலக்கான முறையில் மட்டும் இணங்குகின்றனவென்ற நிகழ்வுண்மையை இடைவிடாது எதிர்கொள்கின்றனர். தற்போதுள்ள உலகளாவிய அதிகாரக் கலாசாரம், அதிகாரத்தொடர்புகளின் பரந்த யதார்த்தங்கள், சமகால மோதுகை தொடர்பில் கேடான அணுகுமுறைகள் என்பவை மோதுகை மாற்றுநிலையாக்கமென்ற செய்திட்டத்தை ஓரளவுக்குக் கற்பனையுலகைச் சார்ந்ததாக்குகின்றன. எனினும், மாற்றுநிலையாக்கவேண்டியதாக எதுவும் இல்லயென்றால் மாற்றுநிலையாக்கமென்ற எண்ணக்கருத்துக்கு அர்த்தமில்லை. இச் சவாலின் மையமாக விளங்குவது பெருமளவுக்கு எதிர்ப்புணர்ச்சி (மாறுகின்றதாயிருந்தபோதிலும்) பகைமையான சூழ்நிலையொன்றில், குறுகியகால மற்றும் நீண்டகாலக் குறிக்கோள்களை ஒன்றாக வைத்திருக்கவும், போட்டியிடுகின்ற நலன்களைச் சரியீடு செய்வதற்கும் முயற்சிக்கின்ற அதேசமயம், அநேக முனைகளில் உடனடியாக முன்னேறவேண்டியது அவசியமாகும். அதிர்ஷ்டவசமாக, மோதுகை மாற்றுநிலையாக்கச் செய்திட்டத்துக்குப் பங்களிப்பதென்ற ஈடுபாட்டுக் கடப்பாடுடைய தனிப்பட்டவர்களும், நிறுவனங்களும், எதிர்கொள்ளவேண்டிய பிரச்சினைகளைப் போன்று, அநேகமானவையாகவும், பல்வகைப்பட்டனவாகவும், வெவ்வேறான முன்னுரிமைகளையும், நிபுணத்துவத்தையும் கொண்டனவாகவும், சமூக அரசியல் கூம்பின் வெவ்வேறு மட்டங்களில் பணியாற்றுவனவாகவும் உள்ளன (லெடராச் 1995). எனினும், உலகின் அனேக பகுதிகளில் பேரழிவான யுத்தங்கள் இடம்பெறுகின்ற இவ்வேளையில், ஒட்டுமொத்தப் பொறுப்பின் அளவைப் பார்க்கின்றபோது, இலகுவில் உற்சாகமிழக்கப்பட்டலாம். துரிதமாற்றம் ஏற்படுகின்ற இவ்வேளையில், அனேக மக்களுக்குக் கலாசாரம் அடையாளத்தை நிலைநாட்ட மூர்க்கமாகத் தேவைப்படும் ஓர் ஆடையாகிவிட்டது. அதேசமயம், அநீதியையும், கொடுமையையும் மூடிமறைப்பதற்கும், வன்முறையை நியாயப்படுத்துவதற்கும் அது பயன்படுத்தப்படுகின்றது. மேலும், எமது கொள்கைகள் அவை எதிர்பாராத நிலைமைகளென்ற வேலிகள் ஊடாக இழுத்தெடுக்கப்படவேண்டியுள்ளன. நடைமுறையில் மோதுகை மாற்றுநிலையாக்கம் மோதுகை வழமையானதென்பதால் (அல்லது மேலும் மோசமானதாக இருக்கலாம்), அதன் மத்தியில் செயற்படுகின்ற வழிமுறைகளைக் காணவேண்டும்.

நாம் செய்யமுனைவதன் அளவையும், சிக்கற்பாட்டையும் கையாளுவதிலே நாம் மனத்திருத்தி கொள்ள வேண்டிய முக்கியமான விடயம், அவ்விடயத்ததைச் செய்வதனால் ஏற்படும் விளைவுகளை நாம் கட்டுப்படுத்த முடியுமென்ற மாயையிலிருந்து விடுபட்டு நாம் அவ்விடயத்தின் நடைமுறை முறைவழியிலே பங்குபற்றலாம் என்பதை ஏற்றுக்கொள்வதாகும், எந்தவொரு விடயம் பற்றிய செய்முறையும் பலாபலனும் இறுதி நோக்கில் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாதென்பதை எற்றுக்கொண்டு திட்டமிடல் மதிப்பீடு பற்றி கடினமான அணுகுமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று நிற்பதுவும், எண்ண நிலையிலுள்ள விளைவுகளை பருப்பொருள் நிலைப்படுத்தி கூறுதலும், அவைபற்றி எதனையும் முன்கூட்டியே கூறமுடியாது என்பதையம் மதிப்பிட முடியாது என்பதனை ஏற்றுக்கொள்ள முடியாமை கட்டுப்படுத்துகை பற்றிய ஒரு பண்பாட்டு நடைமுறையின் வழியாக வருவதென்பர். இந்த பண்பாட்டு நடைமுறை இன்றைய கருத்துக்களின் படி பால் நிலை சார்ந்ததுவும் மேல்நாட்டு நிலைப்பட்டதுமான ஒன்றாகும் என கூறுவர். (பலென்கி, மற்றும் ஏனையோர் 1986), பகுப்பாய்வு உபாய மார்க்க திட்டமிடல் ஆகியனவற்றின் மூலம் மேற்கொள்ளும் விடயம்த்துக்கான நோக்கம் பற்றிய தெளிவிருக்க வேண்டிய அதேவேளையில் அவை, செயல் நிலையில் நெகிழ்வுத்தன்மையை கொண்டதாகவும் உள்ளுணர்வுக்கு இடம்கொடுப்பதாகவும் இருத்தல் வேண்டும். சரியான மதிபீட்டினைச் செய்துகொள்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கையின் போது ஏற்படக்கூடிய மாற்றங்கள் பற்றியும் தெளிவிருத்தல் வேண்டும். அதாவது முன்னர் திட்டமிட்ட முறைமையிலும் கிடைக்கக் கூடிய பலாபலன்கள் என்பவற்றிலும் ஏற்படக்கூடிய மாற்றங்களை உள்வாங்கி மதிப்பீடு செய்வதாகும். விளைவுகள் ஏமாற்றமளிப்பவையாக அல்லது ஆச்சரியத்தை தருவனவாக இருந்தாலும்கூட,மேற்கொள்ளப்பட்ட பணியை அதன் ஏற்புடைமை நிலைநின்று மதீப்பீடு செய்தல் அவசியமாகும். மேலும், அதன் நீண்டகாலத்தாக்கம் எப்பொழுதுமே உணரப்படாது போய்விடலாம். நிதிக்கொடை நிறுவனங்கள் வழங்குகின்ற வளங்கள் நல்ல விளைவுக்குப் பயன்படுத்தப்படவேண்டுமென்ற அவற்றின் கோரிக்கைகளினதும், அத்தகைய செயல்விளைவை அவர்கள் தீர்மானிக்க முன்மொழிகின்ற விதிமுறைகளினதும் நோக்கில் இது சிரமமானதாயிருக்கலாம் (மோதுகை மாற்றுநிலையாக்க நிறுவனங்களுக்கும், நிதிக்கொடை வழங்கும் முகவர் நிறுவனங்களுக்கும் இடையிலான அதிகாரத்தொடர்புகள் ஆய்வுக்கும், சிந்தனைக்குமான ஒரு சுவாரஸ்யமான விடயப்பரப்பாக அமையும்). எனினும், திட்டவட்டமான சான்றுக்கும், நீண்டகாலப் பெறுபேறுகளைவிட உடனடியான பரவலான பெறுபேறுகளுக்குமான கோரிக்கைகளால் அடக்கப்படுவதற்கு நாம் இடமளிப்போமாயின் நேர்மையீனத்துக்கும், மயக்கத்துக்கும், நம்பிக்கையின்மைக்கும் இட்டுச் செல்லப்படும், ஆபத்தில் நாம் இருக்கின்றோமென நான் நம்புகின்றேன்.



பரந்த அளவில். நீண்டகால மோதுகை மாற்றுநிலையாக்கம், பண்பாட்டினதும், கட்டமைப்புச்சார்ந்த தொடர்புகளினதும் மாற்றுநிலையாக்கம் சம்பந்தப்பட்டதாகும். மேலாண்மை பாங்கை விட்டு சமத்துவமும், ஒத்துழைப்பும் கொண்ட அடிப்படையிலே இயங்குவதனால் அது பண்பாடு அமைவியல் மாற்றங்கள் பற்றியதாகிவிடும். அத்தகைய மாற்றம் ஏற்படுவதற்கு சகலரினதும் சமமான ஈடுபாடு அவசியமாகும். அதாவது பல்வேறு பண்பாட்டு பின்புலத்தை கொண்ட ஆண்களும் பெண்களும் ஈடுபடுவதாக இருத்தல் வேண்டும். இது நீதியின் தேவையென்பது மாத்திரமல்லாது சகலரும் ஈடுபடவில்லையெனில் அத்தகைய முயற்சி யாவரையும் உள்ளடக்கியதொன்றாக அல்லாது போய்விடும். நடைமுறை யதார்த்தங்களினுள் நின்று தொழிற்படுதல் அவசியமாகும். நாம் மோதுகை மாற்று நிலையில் வரும் அந்த நீதி நியாயங்களுக்கு ஏற்ப பணியாற்றவேண்டிய அதேசமயம், அந்த மோதுகை மாற்று நிலையினுள்ளே தொக்கி நிற்கும் நீதி கௌரவப் பெறுமானங்களை நெறிபுரளாது பேணிக் கடைப்பிடித்தல் வேண்டும். இது நம்மையே ஒரு மோதுகை நிலைக்குள் தள்ளலாம். நம்மிடையே உள்ள அகநிலை வேறுபாடுகளுடனும் வித்தியாசங்களுடனும் நாம் மோதிப் போராட வேண்டிய நிலை ஏற்படும். அத்துடன் பல்வேறு உலகநோக்குக்களுடன் சொல்லாடுவதற்கான நிலைமையும் ஏற்படும். ஆயினும் மோதுகைதானே நாம் ஈடுபட்டுள்ள விடயம், பணி ஆகும்.

## 6. உசாத்துணை, மேல் வாசிப்புக்கானவை


Alexander, Titus 1996. *Unraveling Global Apartheid: An Overview of World Politics*, Cambridge: Polity Press.

Belenky, Mary Field, et al 1986. *Women's Ways of Knowing: The Development of Self, Voice and Mind*, New York, NY: Basic Books.

Boulding, Kenneth 1978. *Ecodynamics*, London: Sage.

Burton, John (ed.) 1990. *Conflict: Human Needs Theory*, London: Macmillan.

Curle, Adam 1971. *Making Peace*, London: Tavistock Publications.

Dworkin, Andrea 2000. *Scapegoat: The Jews, Israel And Women's Liberation*, London: Virago.

Eisler, Riane 1990. *The Chalice and the Blade: Our History, Our Future*, London: Unwin Paperbacks.

Francis, Becky 2000. *Boys, Girls and Achievement*, London: Routledge.

Freire, Paulo 1972. *Pedagogy of the Oppressed*, London: Penguin.

Galtung, Johan 1990. "Cultural Violence," *Journal of Peace Research* 27, 3, 291-305.

Gutmann, Amy (ed.) 1994. *Multiculturalism*, Princeton, NJ: Princeton University Press.

King, Martin Luther 1963. *Why We Can't Wait*, New York, NY: New American Library.

Lederach, John Paul 1995. *Preparing for Peace: Conflict Transformation Across Cultures*, New York, NY: Syracuse University Press.

Max-Neef, Manfred 1985. "Reflections on a Paradigm Shift in Economics," in *The New Economic Agenda*, Inverness: Findhorn Press.

Reimann, Cordula 1999 (unpublished). *Towards Gender Mainstreaming in Crisis Prevention and Conflict Management: Guiding points for the German Development Cooperation Agency.*

Saghal, Gita and Nira Yuval-Davis (eds.) 1992. *Refusing Holy Orders: Women and Fudamentalism in Britain*, London: Virago Press.

Said, Edward 1978. *Orientalism*, London: Routledge and Keyan Paul.

Salem, Paul 1993. "In Theory: a Critique of Conflict Resolution from a Non-Western Perspective," *Negotiation Journal IX*, 4, 361 - 369.

Taylor, Charles 1994. "The Politics of Recognition," *in* Gutmann, op. cit., 25-74.